Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JUNE 14, 2021

திங்கட்கிழமை ஜூன் 14, 2021 | ஒளி: 07 கதிர்: 21 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | விலை ரூ.10

## காஸ் விலையும் 300 ரூபாயால் கூடும்?




சமையல் எரிவாயுவின் விலை, சிலிண்டர் ஒன்றுக்கு 300 ரூபாயால் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளனவென தகவல்கள் தெரிவிக்கின்றன.

காஸ் விலையை அதிகரிக்கவேண்டுமென இரண்டு நிறுவனங்களும் அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளன.

தொடர்ச்சி P2




### எரிபொருள்களின் விலையேற்றம்

# பற்றி எரிகிறது

### தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தும்

## 'ஓர் அங்கம்'

எரிபொருள் விலை அதிகரிப்பானது, தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாகும் என, எரிபொருள்கள் விலை அதிகரிப்பு தொடர்பாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## 'வாபஸ் பெறவேண்டும்'

எரிபொருள்கள் விலையை அதிகரிப்பதற்கு எடுத்திருக்கும் தீர்மானத்தை அரசாங்கம் மீளப்பெற வேண்டும் எனக் கோரியுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மக்களின் மீது சுமையை சுமத்த வேண்டாம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

எரிபொருள்களின் விலையை அதிகரிக்கும் மிக மோசமான தீர்மானத்தை யார் எடுத்தது என்பது தெரியாத அளவுக்கு அரசாங்கம் நகைப்புக்குரியதாக மாறியுள்ளதாகவும் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## கையை விரித்தார் கம்மன்பில

ஜனாதிபதி, பிரதமர் பங்கேற்றிருந்த வாழ்க்கைச் செலவு உப-குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம்தான் எரிபொருள் விலையேற்ற அறிவிப்பை விடுத்தேன் எனத் தெரிவித்துள்ள வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, விலை அதிகரிப்பு தொடர்பான தீர்மானம், தனது தனிப்பட்ட தீர்மானமல்ல என்றார்.

தொடர்ச்சி P2



## 'உலக மகா நடிப்புடா'

"அரசாங்கத்தின் இந்தத் திடீர் நன்னடத்தையைப் பார்த்து, 'உலக மகா நடிப்புடா' என, நாடு முழுக்க மக்கள் மயங்கி, வாயடைத்து நிற்கிறார்கள்" என, தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி கூறியுள்ளார்.

எரிபொருள் விலையை ஏற்றியமைக்கு பொறுப்பேற்று எரிபொருள் அமைச்சர் உதய கம்மன்பில ராஜினாமா செய்ய வேண்டுமென ஆளுகின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.

தொடர்ச்சி P2



## '3 ராஜபக்ஷர்களும் இருந்தனர்'

வாழ்க்கைச் செலவு தொடர்பிலான உப-குழு, கடந்த 9ஆம் திகதியன்று கூடியது எனத் தெரிவித்த அமைச்சர் உதய கம்மன்பில, அந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகிய மூன்று ராஜபக்ஷர்களும் இருந்தனர் என்றார்.

அவர்கள் மட்டுமன்றி, அமைச்சர்களான பந்துல குணவர்தன, மஹிந்தானந்த அளுத்கமகே, டலஸ் அழகபெரும, டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட நானும், இராஜாங்க அமைச்சர்களான அஜித் நிவாட் கப்ரால், லசந்த அழகிய வண்ண ஆகியோரும் பங்கேற்றிருந்தோம் என்றார்.

தொடர்ச்சி P2

## அரசாங்கத்துக்கு ரணில் சிவப்பு சமிக்ஞை



ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, சில விவகாரங்கள் தொடர்பில் அரசியல் தலையீடுகள் இன்றி, அதிரடியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும், மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் பெரும் பொருளாதாரச் சுமைக்கு மேலும் சுமையை சேர்க்க வேண்டாம் என்றும் அதனூடாக நாட்டை அழிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## '14 நாள்களுக்கு 90 சதவீதம் முழுதாய் முடக்க வேண்டும்'



கொரோனா வைரஸின் பரவலை முழுமையாகக் கட்டுப்படுத்த வேண்டுமாக இருந்தால், சனத்தொகையில் 90 சதவீதமானோரை தத்தமது வீடுகளிலேயே முடக்கி வைக்கவேண்டுமென கோரிக்கையொன்றை முன்வைத்துள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர், இல்லையென்றால் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாத நிலையேற்படும் என எடுத்துரைத்துள்ளார்.

இது தொடர்பில் அச்சங்கத்தின் உதவிச் செயலாளர் நவீன் டி சொய்சா, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

தொடர்ச்சி P2



## மீன் விற்ற அறுவர் கைது

■ எம்.றொசாந்த்

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில் - குளப்பிட்டி சந்திக்கு அருகில், மீன் வியாபாரத்தில் ஈடுபட்ட 6 மீன் வியாபாரிகள், நேற்று (13) காலை, யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## 200 கிலோ கிராம் ஹெரோய்ன் தென் கடற்பரப்பில் சிக்கியது



வெலிகம- மிரிஸ்ஸ பொல்வத்த கடற்பரப்பில் 2 பில்லியன் ரூபாய்க்கும் ( 200 கோடி) அதிகம் பெறுமதியான ஹெரோய்ன் போதைப்பொருளுடன் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## மாணவர்களுக்கும் தடுப்பூசியை செலுத்துவது குறித்து ஆலோசனை



கொரோனா தொற்றுக் காரணமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீண்டும் திறக்கும் போது, பிள்ளைகளின் நோய்கள், பிரச்சினைகளை கண்டறிய குழந்தை மருத்துவர்களின் உதவியை பெறுமாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கல்வி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

பாடசாலைகளை மீள ஆரம்பித்தல் மற்றும்

தொடர்ச்சி P2

## கூட்டமைப்பில் இருந்து 'டெலோ வெளியேறாது'

P4

## தமிழ் மக்களின் கோரிக்கைகள் 'கிழக்கில் நிராகரிப்பு'

P4

## 'மண்டியிடும் அரசியலை மலையக தலைமைகள் கைவிட வேண்டும்'

### மஸ்கெலியாவில் இருந்து கஜேந்திரகுமார் எம்.பி அறைகூவல்

■ எஸ்.கணேசன்

மலையக மக்களை ஒடுக்கும் செயற்பாடுகளை தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும்,

தொடர்ச்சி P2





## 'தெல் பாலா'வின் மகள் கைது

இலங்கையில் பல குற்றங்களில் ஈடுபட்ட பின்னர், இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருந்த நிலையில் மரணமான 'தெல்பாலா' என்றழைக்கப்படும் கருப்பையா பாலேந்திரன் என்பவரின் மகள், கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள அவரிடமிருந்து 50 கிராம் ஹெரொய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



### 'சைக்கிளில் இவர்கள் சபைக்கு வருவார்களா?'

## எதிர்பார்த்து காத்திருக்கிறார் இம்ரான்

■ ஏ.எம்.ஏ.பரீட், ஹஸ்பர் ஏ ஹலீம், அப்துல்சலாம் யாசீம்

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து, அடுத்த பாராளுமன்ற அமர்வுக்கு பிரதமர் தலைமையில் அமைச்சர்கள், எம்.பிக்கள் சைக்கிள்களில் வருவார்கள் என எதிர்பார்ப்பதாக, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

"நல்லாட்சி அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட எரிபொருள் விலை சூத்திரத்துக்கமைய, நியாயமான எரிபொருள் விலையேற்றம் இடம்பெற்ற போது,

தொடர்ச்சி P2

## 'அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப கைகோர்ப்போம்'

■ எம்.றொசாந்த்

கோரமான ஆட்சியை, இந்த அரசாங்கம் கைவிடாவிட்டால், எதிர்க்கட்சிகளுடன் இணைந்து அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டி நேரிடுமென, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில், நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே,

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## 'ஓர் அங்கம்'

எரிபொருள்கள் விலையை அதிகரிப்புக்கான பல காரணங்கள், ஜனாதிபதி தலைமையில், பிரதமர், விடய தானத்துக்குப் பொறுப்பான அமைச்சர்களின் பங்களிப்படன் இடம்பெற்ற வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவில் அவதானம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பரிமாற்றத்துக்கு செலவழிப்பதை விட மேலதிகமாக இலங்கை எரிபொருள் கூட்டத்தாபனம் நட்டமடையும் நிறுவனமாக மாறியுள்ளதால், வருடாந்தம் இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பன கடனில் பயணிக்கும் நிறுவனங்களாகியுள்ளன. குறித்த இரண்டு வங்கிகளுக்காக, இதுவரை 652 பில்லியன் கடனை செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபை, 85 பில்லியன் கடனை குறித்த 2 வங்கிகளுக்கும் செலுத்துவதுடன், இதற்காக அரச வங்கியின் கடனுக்கு திறைசேறியால் உத்தரவாதம் விடுக்கப்பட்டுள்ளதுடன், கடனுக்கு அதிகம் வட்டியை செலுத்த வேண்டி எற்பட்டுள்ளது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் மற்றும் பொது வாகன சேவைகளுக்கான எரிபொருள் பாவனையை 60 சதவீதமாக குறைக்கப்பட வேண்டும் என்பதுடன், போக்குவரத்துக்காக இரத்திரனியல் வாகனங்களைப் போலவே ரயில் சேவைகளுக்கு முடிந்தவரை மின்சார செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். எரிபொருளால் செயற்படும் வாகன இறக்குமதியை முழுமையாக நிறுத்திவிட்டு, மின்சார கார் பாவனையை மேம்படுத்தல் ஓட்டோக்களுக்கு மின்சார என்ஜினைப் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிக எரிபொருள் பாவனையால் நகர பிரதேச சுற்றாடல் அசுத்தமடைதல், மக்களுக்கு சுவாசத்துடன் தொடர்புடைய நோய்களும் ஏற்படுகின்றன.

இலங்கை மின்சார சபை மின் உற்பத்திக்காக சாதாரணமாக 30 சதவீத எரிபொருளைப் பயன்படுத்துவதாகவும் அவற்றைத் தடுப்பதற்காக புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை விரைவாக உற்பத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இதற்காக சகல வீடுகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், அரசாங்க கட்டடங்களுக்கு சூரியமின் உற்பத்தி கட்டமைப்புகளை வழங்குவதன் ஊடாக, அதிக மின்செலவுகளை குறைத்துக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, எரிபொருள் விலை அதிகரிப்பானது, தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் பொது வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமே என்றும் அதுநாட்டின் வங்கி கட்டமைப்பை பலப்படுத்தி, குறைந்த வட்டி வீதத்தை கொண்டு நடத்தவும் அந்நிய செலாவணியின் செலவைக் குறைத்து, பரிமாற்ற வீதத்தை குறைப்பதற்கும் மக்களின் சுகாதாரம், பாதுகாப்பை ஏற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசாங்கத்துக்கு ரணில் சிவப்பு சமிக்ஞை

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கியிருக்கும் விசேட செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை இழக்கப்படுமாயின் ரூபாயின் விலை குறைவடைந்து, ஒரு டொலருக்கு 300 ரூபாய் செலுத்தவேண்டிய நிலைமை ஏற்படும். அத்துடன், ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளை இழக்கவேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை 2017ஆம் ஆண்டில் பெற்று நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய எங்களுடைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

வரிவிதிப்பு இல்லாமல் ஐரோப்பாவுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி கிடைத்ததன் ஊடாக, ஆடை மற்றும் மீன்பிடித் தொழில்கள் மேம்படுவதற்கு வழிவகுத்தது.

ஐரோப்பிய பாராளுமன்றத்தில் இலங்கை மீதான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டமையால், இந்த ஜி.எஸ்.பி பிளஸ் வரி சலுகை தொடர்பாக ஒரு பிரச்சினை எழுந்துள்ளது. இந்தச் சலுகையை இழக்கவேண்டிய நிலைமை ஏற்படலாமென எங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றால் நமது சுற்றுலாத் துறை ஆபத்தில் உள்ளது. கப்பலின் பிரச்சினையுடன், எங்கள் மீன்பிடித் தொழிலுக்கும் பிரச்சினைகள் எழுந்துள்ளது. வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது. எனவே, நமது அந்நிய செலாவணி வீழ்ச்சியடைந்துள்ளது. அந்நிய செலாவணி வீழ்ச்சியால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் இலங்கை பங்களாதேஷில் இருந்து 200 மில்லியன் டொலர் கடன் வாங்கியது. தற்போது, நமது பொருளாதாரத்துக்கு அந்நிய செலாவணியைக் கொண்டுவர தேயிலை மற்றும் ஆடைத் தொழில்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. அத்தகைய விடயத்தில், ஜி.எஸ்.பி. பிளஸ் வரி நிவாரண சலுகையை இழந்தால், ரூபாய் மதிப்புக் குறைந்துவிடும். மேலும், ஒரு டொலருக்கு சுமார் 300 ரூபாய் செலுத்த வேண்டியிருக்கும். இதனால் ஆயிரக்கணக்கான வேலைகளும் இல்லாமற்போகும்.

இவ்வாறான ஆபத்தை எதிர்கொள்ளும்போது, ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையை இனிமேலும் அரசியல் மயமாக்கவேண்டாம். அத்துடன், ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையைப் பாதுகாக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## 'வாபஸ் பெறவேண்டும்'

அரசாங்கத்தில் இருப்பவர்கள், ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டுகளை சுமத்திக்கொள்வதால் மக்களுக்கு எந்தப் பலனும் இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துக்குள் இருக்கும் உள்வீட்டுப் பிரச்சினைகளை அவர்கள் உள்ளக ரீதியில் தீர்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, அதன் மூலம் மக்கள் பாதிக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டிருக்கத் தயாரில்லை.

கொரோனா பாதிப்புக்கு மத்தியில் மக்கள் அதிக துயரங்களை எதிர்கொள்ளும் இந்தச் சந்தர்ப்பத்தில், அரசாங்கம் அதிகார மோகத்தில் பொறுப்பின்றி எடுத்துள்ள இந்தத் தீர்மானத்தை இரண்டு தடவை சிந்திக்காமல், உடனடியாக எரிபொருளின் விலையைக் குறைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## '3 ராஜபக்ஷர்களும் இருந்தனர்'

இந்த விலை அதிகரிப்பானது, ஜனாதிபதி, பிரதமரின் அனுமதியுடனேயே முன்னெடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

எரிபொருள்களின் விலைகள், வெள்ளிக்கிழமை (11) நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதிகரிக்கப்பட்டதன் பிரகாரம் (லீற்றருக்கு)

பெட்ரோல் ஒக்டேன் 92- ரூ .157

பெட்ரோல் ஒக்டேன் 95- ரூ .184

ஓட்டோ டீசல்- ரூ . 111

சூப்பர் டீசல்- ரூ .144

மண்ணெண்ணெய்- ரூ .77

என்ற விலையின் அடிப்படையிலேயே சந்தைகளில் தற்போது விற்பனை செய்யப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## 'உலக மகா நடிப்புடா'

பி கூறுவதை வேறு எப்படி சொல்வதென மக்களிடம் வினவியுள்ளார்.

பிழை நடந்தால், இப்படி பொறுப்பேற்று ராஜினாமா செய்வது நல்லதே. அது நாகரிக அரசியலே. ஆனால், இந்த அரசாங்கத்தின் வரலாறு அப்படி இல்லையே.

ஆகவே, திடீரென அரசாங்கம் இவ்வளவு நாகரிகமாக செயற்படுவதை பார்க்கும் போது, "நீங்கள் ஒன்றும் அவ்வளவு நல்ல அரசாங்கம் கிடையாதே" என மக்கள் சந்தேகத்துடன் அங்கலாய்கிறார்கள் என்றும் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

உரிய வேளையில் தடுப்பூசிகளை வாங்க, இந்த அரசாங்கம் தவறி விட்டது. மிகவும் நட்பு நாடெனக் கூறிக்கொள்ளும் சீனா, தங்கள் தயாரிப்பான 'சைனோஃபாம்' தடுப்பூசியை, வங்காளதேசத்துக்கு 10 டொலர் விலையிலும், இலங்கைக்கு 15 டொலர் விலையிலும் தருகிறது. தடுப்பூசியைத் தேடி மக்கள் அல்லோல கல்லோலப்படுகிறார்கள். இவை அனைத்துக்கும் பொறுப்பேற்று ராஜினாமா செய்ய இங்கே ஆளில்லை.

இந்நிலையில், திடீரென அரசாங்கம் இவ்வளவு நாகரிகமாக செயற்படுவதைப் பார்க்கும் போது, எமக்குச் சந்தேகம் வருகிறது. இதற்குள் உள்ள உள்குத்து என்ன என்று கேட்கத் தோன்றுகிறது. தமிழ் சினிமா சிரிப்பு நடிகர்களின் "நீ ஒன்னும் அவ்வளவு நல்லவன் கிடையாதே?" என்ற பிரபல சிரிப்பு சந்தேக வசனம் ஞாபகத்தில் வருகிறது.

உண்மையில், அமைச்சரவைத் தீர்மானத்தின்படியே விலை தீர்மானிக்கப்படுகிறது. அமைச்சரவையில் வாழ்க்கைச் செலவு உப -குழு இருக்கிறது. அதில்தான் விலைவாசி முடிவுகள் எடுக்கப்பட்டன. அமைச்சரவை அமைச்சராக இருந்த எனக்கு இதுபற்றி நன்கு தெரியும். அமைச்சரவைப் பத்திரங்களை யார் முன் வைத்தாலும், முடிவு எடுக்கப்பட்டால் அதுபற்றி முழு அமைச்சரவையும் பொறுப்பு ஏற்க வேண்டும் எ ன்றும் அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## '14 நாள்களுக்கு 90...

"இரண்டு வாரங்களுக்கான கட்டுப்பாடு, மிகவும் முக்கியமானது. இல்லையேல், கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாடுகள் அமலில் உள்ளது. எனினும், முறையாக கடைப்பிடிப்பதில்லை. நமது நாட்டின் சனத் தொகையோடு ஒப்பிடும்போது, இந்தியாவைவிட வேகமாகக் கொரோனா வைரஸ் பரவி வருவதாகவும் தெரிவித்துள்ள அவர், நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் ஆபத்தான நிலையில் பரவி வருவதாகவும் கூறினார்.

இதேவேளை, கொரோனா தடுப்பூசிகள் செலுத்தும்போது 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் முன்னுரிமையளிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 'மண்டியிடும் அரசியலை...

பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "இந்நிலைமையை உணர்ந்து, தங்களது மண்டியிடும் அரசியலைக் கைவிட்டு, பொதுவானதொரு நிலைப்பாட்டுக்கு மலையகத் தலைமைகள் வரும் பட்சத்தில், அவர்களுடன் இணைந்து செயற்படுவதில் எவ்விதத் தடையும் கிடையாது" என்றார்.

பயணக் கட்டுப்பாட்டால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள மஸ்கெலியா பகுதிகளில் உள்ள சுமார் 600 குடும்பங்களுக்கு உலருணவு பொருள்கள், நேற்று (13) வழங்கிவைக்கப்பட்டன. அங்குவைத்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து தெரிவித்த அவர், தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதே எமது கருத்தாகும். மலையகம், முஸ்லிம் தலைமைகளுடன் இணைந்து செயற்படுவதற்கான முயற்சிகள் கடந்த காலங்களிலும் முன்னெடுக்கப்பட்டன. எனினும், கொள்கை ரீதியிலான முரண்பாட்டால் பொதுவானதொரு நிலைப்பாட்டுக்கு வரமுடியவில்லை.

வடக்கு, கிழக்கில் வாழும் ஈழத் தமிழ் மக்கள், கடந்த 73 ஆண்டுகளாக எவ்வாறெல்லாம் குறிவைக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராக அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டனவோ, மேற்படி அனைத்து நடவடிக்கைகளும் இன்று மலையகம், முஸ்லிம் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே, இந்நிலைமையை உணர்ந்து, மலையகம், முஸ்லிம் அரசியல் தலைமைகள், வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களோடு ஒரு பொதுநிலைப்பாட்டை எடுத்து, தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ளும் விதத்தில் தங்களின் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டால் இணைந்து செயற்படுவதில் எந்த பிரச்சினையும் இல்லை என்றார்.

## கையை விரித்தார் கம்மன்பில

"எரிபொருள் விலை அதிகரிப்புகளை நிதி அமைச்சே, இந்நாள் வரைக்கும் அறிவித்து வந்தது. முதற்றடவையாக வலுசக்தி அமைச்சரால் எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது" என்றார்.

வலுசக்தி அமைச்சில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிப்புத் தொடர்பான ஆவணத்தில் நிதியமைச்சரான மஹிந்த ராஜபக்ஷவே கையெழுத்திட்டுள்ளார். இந்நிலையில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரான சாகர காரியவசம் எம்.பியின் அறிக்கையின் ஊடாக, அப்பெரமுனவால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தீர்மானத்துக்கே சவால் விடுக்கப்பட்டுள்ளது என்றார்.

தன்னை இராஜினாமா செய்யுமாறு வலியுறுத்தி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் புகைப்படத்துடன் கூடிய தலைப்புக் கடிதத்தில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளருக்கு அனுமதி வழங்கியது யார் என்பதை நாட்டு மக்களுக்குத் தெளிவுப்படுத்த வேண்டுமென வலியுறுத்திய அவர், இந்த விவகாரத்தில் தாங்கள் எவரும் தொடர்பில்லையென சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். ஆகையால், உண்மையை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதற்கு பகிரங்க விவாதத்துக்கு வருமாறும் அமைச்சர் உதய கம்மன்பில அழைப்புவிடுத்தார்.

## எதிர்பார்த்து...

அதற்கெதிராக தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர், பாராளுமன்ற அமர்வுக்கு சைக்கிள்களில் வருகை தந்தனர்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்று (13) அவர் தெரிவிக்கையில்,

"எரிபொருள் விலையேற்றத்தால் மக்கள் கஷ்டங்களை அனுபவிப்பதாகவும் அந்த விலையேற்றத்தை எதிர்த்தே சைக்கிள்களில் பாராளுமன்றம் வந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

"அன்று மக்களுக்காக சைக்கிளிலும் மாட்டு வண்டிகளிலும் பாராளுமன்றம் வந்தவர்கள், அடுத்த பாராளுமன்ற அமர்வில் அதனைச் செய்வார்களா?

"இவர்களது ஏமாற்று அரசியல் குறித்து அடுத்த பாராளுமன்ற அமர்வு வரை மக்கள் பொறுத்திருந்து பார்க்க முடியும்.

"தற்போதைய எரிபொருள் விலையேற்றத்தால் போக்குவரத்துச் செலவு உட்பட சகல பொருட்களினதும் விலைகளும் அடுத்தடுத்து அதிகரிக்கப்படவுள்ளன.

"குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து கொண்டு குளிருட்டப்பட்ட வாகனங்களில் பயணிப்போர், மக்கள் அனுபவிக்கும் இந்தக் கஷ்டங்களை விளங்கிக் கொள்ளப் போவதில்லை.

"நாட்டிலுள்ள மக்கள் கல்வி அறிவு கூடியவர்கள். நன்கு சிந்திக்கும் திறன் உள்ளவர்கள். எனவே, இது போன்ற வெட்கமில்லாத காரணங்களைக் கூறி அவர்களை ஏமாற்றும் செயன்முறையை அரசாங்கம் கைவிட வேண்டும்" என்றார்

## மாணவர்களுக்கும்...

ஆசிரியர்கள், மாணவர்களுக்கு கொவிட் -19 நோய் எதிர்ப்பு தடுப்பூசிகளை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தி, அலரி மாளிகையில் வெள்ளிக்கிழமை (11) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொவிட்-19 தொற்று நிலைமை கட்டுப்படுத்தப்பட்ட பின்னர், உடனடியாக கட்டம் கட்டமாக பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதன் முக்கியத்துவம் குறித்து சுட்டிக்காட்டிய பிரதமர், ஆசிரியர்களுக்கான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை சுகாதார அமைச்சின் ஊடாக நிறைவேற்றிக் கொள்ள முடியும் என சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட குழந்தை மருத்துவர்களின் சங்கத்தின் பிரதிநிதிகள் பாடசாலைகளை மீளத் திறக்கும்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு தமது சங்கத்தின் ஆதரவை கல்வி வலய மட்டத்தில் பெற்றுக்கொடுக்க முடியும் என பிரதமர் முன்னிலையில் தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய, நாடு முழுவதும் உள்ள 99 கல்வி வலயங்களுக்கும் தமது சங்கத்தின் சார்பில் பிரதிநிதிகளை பெயரிட்டு மேற்படி நடவடிக்கையை முறையாக முன்னெடுப்பதாக சங்கத்தின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

"பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான தடுப்பூசி திட்டமொன்று செயற்படுத்தப்படின் அதன்போது தரம் 11, தரம் 13 மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்" என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

## காஸ் விலையும்...

இது தொடர்பில், அமைச்சரவையின் உப-குழு, நாளை (14) கூடவிருக்கின்றது.

அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையிலான இந்த அமைச்சரவையின் உப-குழுவில், அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, மஹிந்த அமரவீர, கெஹலிய ரம்புக்வெல, உதய கம்மன்பில ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

காஸ் சிலிண்டர் ஒன்றின் விலையை 700 ரூபாயால் அதிகரிக்குமாறு, காஸ் நிறுவனங்கள், தங்களுடைய விலை அதிகரிப்புக் கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மீன் விற்ற அறுவர்...

பயணக் கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும் போது, நடமாடும் வியாபாரத்துக்கு மட்டுமே அனுமதியளிக்கப்பட்டுள்ள நிலையில், தேவையற்ற வகையில் மக்களை ஒன்றுதிரட்டி, மீன் வியாபாரம் செய்த குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என, பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து வியாபாரத்துக்கென வைத்திருந்த மீன்களையும் வியாபாரப் பொருள்களையும், பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மக்களைத் திரட்டி இவ்வாறான வியாபார நடவடிக்கைகளை செய்ய வேண்டாமென நல்லூர் பிரதேச சபையால், ஏற்கெனவே அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள நிலையிலும், தொடர்ச்சியாக அப்பகுதியில் வியாபாரம் மேற்கொண்ட இந்த 6 வியாபாரிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 200 கிலோ கிராம் ஹெரோய்ன்...

இதன்போது, சமையல் எரிவாயு சிலிண்டர் மற்றும் சாக்குப் பைகளிலிருந்து 200 கிலோ கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிறிய படகொன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

## 'தெல் பாலா'வின்...

கருப்பையா நிர்மலா (41) என்றழைக்கப்படும் அப்பெண், மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப் பொருள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் பல குற்றங்களில் ஈடுபட்டுள்ள தெல் தெல்பாலா, சட்டத்தில் இருந்து தப்பிக்க நாட்டை விட்டு வெளியேறி, இந்தியாவில் கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக வசித்து வந்தார்,

அங்கு அவர் இன்றைக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் மரணமடைந்தார்.

## 'அரசாங்கத்தை வீட்டுக்கு...

அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்

அங்கு தொடர்ந்துரைத்த அவர், தற்போதைய அரசாங்கமானது, மக்கள் மீது அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் பிரயோகித்து, மக்களை அடக்கியாள நினைப்பதாகவும் சாடினார்.

எதிர்காலத்திலாவது சரியான முறையில் செயற்படாவிட்டால், ஏனைய எதிர்க்கட்சிகளுடன் கூட்டமைப்பினரும் இணைந்து இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையை முன்னெடுப்பொமெனவும், சுமந்திரன் எச்சரித்தார்.

இதேவேளை, தற்போதுள்ள கொரோனா நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கான தகுந்த நடவடிக்கைகள் எவையும், இந்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டிய சுமந்திரன், சுகாதார அமைச்சும் அதனோடு சம்பந்தப்பட்ட இணைந்த அமைச்சுகளும் இந்த விடயம் தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டுமெனவும் கூறினார்.

சுகாதார அமைச்சுக்குள்ள அதிகாரத்தை வேறு யாராவது பயன்படுத்துகிறார்களா, என்பது எமக்குப் புரியவில்லை. ஆனால், இந்த விடயங்கள் தொடர்பில் யாராவது ஒருவர் பொறுப்புக்கூற முன்வர வேண்டும். இல்லையென்றால், அவர்கள் மக்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக, தங்களது பதவிகளை இராஜினாமா செய்யலாம் என, அவர் மேலும் தெரிவித்தார்.

எம்.எச்.முஹம்மதுக்கு

# நூறாண்டு நினைவு தினம்

## 'ஸூம்' வழியாகக் கூட்டம்



முன்னாள் சபாநாயகரும் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.முஹம்மதின் 100ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, இலங்கை இஸ்லாமிய நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'ஸூம்' மூலமான நினைவு தினக் கூட்டம் நாளை (15) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03 மணிக்கு நடைபெறவுள்ளது.

'சிறுபான்மையினரும் சகவாழ்வும்' என்ற தொனிப்பொருளில் இடம்பெறும் இந்த நினைவு தின நிகழ்வில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ , மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மஃமூன் அப்துல் கையூம், கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், பாகிஸ்தானின் செனட் சபை உறுப்பினர் ராஜா முஹம்மட் ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில், விசேட பேச்சாளர்களாக நீதி அமைச்சர் அலி சப்ரி, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, கும்புறுகமுவ விஜித தேரர், ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி உட்படப் பலரும் கலந்து கொள்வர்.

கொரோனாவால்

# '60 வயதைக் கடந்தவர்களே அதிகளவில் உயிரிழப்பு'

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்போரில் நூற்றுக்கு 70 சதவீதமானவர்கள் 60 வயதைக் கடந்தவர்கள் எனவும், உயிரிழப்போரில் எஞ்சிய 25 சதவீதமானோர், ஏனைய நோய்களைக் கொண்டவர்களெனவும் தெரியவந்துள்ளது.

கொரோனா தொற்றுக்குள்ளாகும் 60 வயதைக் கடந்தவர்கள், அதிகளவில் உயிரிழந்துள்ளமை தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டுமென வைத்தியர்கள் தெரிவித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எதையும் செய்ய முடியாது

# 'பலவீனம் அடைந்துள்ளது அரசாங்கம்'



தற்போதைய அரசாங்கத்தால் எதையும் செய்ய முடியாத நிலையே காணப்படுகிறது. அரசாங்கம் மிகவும் பலவீனமடைந்த நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், கொரோனா ஒழிப்புப் பணிகள் மட்டுமல்ல, பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் அரசாங்கம் வீழ்ச்சியடைந்துள்ளது எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், முன்களப் பணியாளர்களுக்கே முதலில் தடுப்பூசிகள் செலுத்தப்பட வேண்டும். அதனாலேயே அவர்களுக்கு முன்னுரிமையளித்து, இதுவரையில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளவில்லை. அரசாங்கத்தின் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தும் பணிகள் வெற்றியளிக்கவில்லை. அறிவுள்ளவர்கள் எவரும் அரசாங்கத்தின் இச்செயற்பாடுகள் வெற்றியளித்ததாகக் கூற மாட்டார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமைத்துவம் தொடர்பில் எந்த விதமான பிரச்சினைகளும் கட்சிக்குள் இல்லை. சஜித், தான்தோன்றிதனமாக முடிவுகளை எடுப்பதில்லை. கட்சியில் உள்ள அனைவருடனும் கலந்துரையாடியே தீர்மானங்களை எடுக்கிறார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவுக்கு உள்ள அரசியல் எதிர்பார்ப்புகள், சஜித்துக்கு பாதிப்புகளையும் ஏற்படுத்தாதெனவும் தெரிவித்த முஜிபுர் ரஹ்மான், மருத்துவ ஆலோசனைகளின்படி பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோ ஓய்வு எடுப்பதாகவும் தெரிவித்தார்.

கருத்துச் சுதந்திரத்தின்

# 'குரல்வளையை நெரிக்க முடியாது'

போலிச் செய்திகளைப் பதிவிடுவோர் அல்லது பகிர்வோருக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனக் கூறிக்கொண்டு, பொதுமக்களுக்குள்ள, கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தின் குரல்வளைகளை பொலிஸார் நெரிக்க இடமளிக்க முடியாதென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளதோடு, இது தொடர்பில், தேவைப்படும் பட்சத்தில் மேலதிக சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வோமெனவும் தெரிவித்துள்ளது.




'கொரோனா நடவடிக்கைகளைத் தடுக்கும், ஒற்றுமையின்மை, வெறுப்பு ஆகியவற்றைத் தோற்றுவிக்கும் போலிச் செய்திகள், புகைப்படங்கள், காணொளிகள் பகிரல்' எனும் தலைப்பிடப்பட்டு, அண்மையில் பொலிஸார் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தனர். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, போலிச் செய்திகளைப் பரப்புவோர் கைது செய்யப்படுவார்களெனவும் எச்சரிக்கப்பட்டிருந்தது.

அவதூறு, வன்முறை தூண்டல்களுடன் தொடர்பில், சட்டங்களை அமல்படுத்துவது தொடர்பில், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு எந்தவிதமான ஆட்சேபனைகளும் இல்லை. பொதுமக்கள் தங்களது அபிப்பிராயங்கள், விமர்சனங்களை கண்ணியமாக வெளிப்படுத்தும்போது, அவர்களின் குரல்வளைகளை நெரிப்பதற்காக, அத்தகைய சட்டங்களை அதிகாரிகள் பயன்படுத்தாதிருப்பதை உறுதி செய்வது, முக்கியமான ஒன்றென அச்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பேச்சு, கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தின் குரல்வளைகளை நெரிப்பதற்காக பொலிஸாரால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிரூபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களை, சில பொலிஸ் அதிகாரிகள், துஷ்பிரயோகம் செய்யலாமெனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

மேலும், நாட்டு மக்களின் பேச்சு சுதந்திரம், கருத்துகளை வெளிப்படுத்தும் சுதந்திரம், அபிப்பிராயங்களை மறுப்பதற்கான சுதந்திரம் ஆகிய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளது.

போலி செய்திகள் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை முழுமையாக விசாரிப்பதற்கு முன்னரே, 'போலி செய்தி' எனப்படும் குற்றத்துக்காக எந்தவொரு நபரும் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்படும் வாய்ப்புகள் உள்ளன.

பொலிஸாரால் வெளியிடப்பட்ட இச்சுற்று நிருபம் தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இது தொடர்பில் தேவைப்படும் பட்சத்தில் மேலதிக சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வோமெனவும் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிவுறுத்தல்களை

# 'இலங்கை பின்பற்றவில்லை'



கொரோனா வைரஸ் தடுப்புசிகளைச் செலுத்துவது தொடர்பில், உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கியிருக்கும் அறிவுறுத்தல்களுக்குப் புறம்பாகவே, இலங்கையில் தடுப்பூசிகள் செலுத்தப்படுவதாகத் தெரிவிக்கும் இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய, தடுப்பூசிகளை செலுத்தும் பணிகளில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தலையிட்டுள்ளதால், அப்பணிகள் ஒழுங்கற்ற முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுகாதாரப் பணியாளர்களையும், நாட்டு மக்களையும் கருத்திற்கொள்ளாது, தனக்கு விரும்பியவர்களுக்குத் தடுப்பூசிகளை செலுத்தும் வியாபாரங்களே தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ள அவர், சுகாதாரப் பணியாளர்கள் 3 ஆயிரம் பேருக்கு இதுவரையில் தடுப்பூசிகள் செலுத்தப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

எனவே தடுப்பூசிகளை செலுத்தும் பணிகள் முறையாக முன்னெடுக்கப்பட வேண்டுமெனத் தான் சுகாதாரத் தரப்பினரிடம் கோரிக்கை விடுப்பதாகவும் இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

# உர மாபியாக்களை அழிப்பது கஷ்டம்

## விவசாயிகள் சேதனப் பசளைக்கு எதிர்ப்பில்லை

■ சேஹ்றன் செனவிரத்ன

உலகம் பூராகவும் உர மாபியாக்கள் செயற்படுவதாகவும் வருடாந்தம் இதுதொடர்பில் 100 மில்லியன் கொடுக்கல் வாங்கல், எமது நாட்டிலும் இடம்பெறுவதாகத் தெரிவித்த விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, இந்த மாபியாக்களை அழிப்பது இலகுவான விடயம் அல்ல என்றார்.

மத்திய மாகாண கொரோனா ஒழிப்பு செயற்குழு கூட்டத்தில் நேற்று முன்தினம் (12) கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

உற்பத்திக்கு தேவையான இரசாயன உரம் இறக்குமதி செய்யப்பட்டு உள்ளது. விவசாயிகள் தேவையற்ற வகையில் உரத்தைக் கொள்வனவு செய்யப் போவதால், சில பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இலங்கையில் 76 சதவீத விவசாயிகளுக்கு உரம் வழங்கி நிறைவு செய்யப்பட்டு உள்ளது.



உரப் பற்றாக்குறை தொடர்பில் சில எதிர்ப்பு நடவடிக்கைகளை பார்க்க முடிகிறது. எனினும், இலங்கையில் எந்தவொரு விவசாயியும் தமக்கு இரசாயன உரம் தேவையெனத் தெரிவித்து, எவ்வித எதிர்ப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

இலங்கைத் தேயிலையானது உலக சந்தையில் நான்காவது இடத்துக்கு வீழ்ச்சியடைந்துள்ளதென தெரிவித்த அமைச்சர், இது இரசாயன உரத்தால் ஏற்பட்டதென்று, எவராவது காட்டுவதற்கு முயற்சித்தார்களாயின் அதில் எவ்வித உண்மையும் இல்லை. தற்போதும் தேயிலை உற்பத்திக்கு இரசாயன உரமே விநியோகிக்கப்படுகிறது என்றார்.

பயணக்கட்டுப்பாடு:

# அதிகரித்துள்ள வீட்டு வன்முறைகள்

நாட்டில் அமல்படுத்தப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாடுகளின் போது, வீட்டு வன்முறைகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கும், பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான தேசிய மட்ட செயலணி, பாதிக்கப்படுவோர் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் விரைவாகக் கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அச்செயலணி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது; பயணக்கட்டுப்பாடுகள் காரணமாக நீதிமன்றங்களுக்கு செல்வதுகூட மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், வீட்டு வன்முறைகள் அதிகரித்துள்ளன. இது நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு சவால்களை ஏற்படுத்தியுள்ளது.

அத்தோடு, வீட்டு வன்முறைகள் தொடர்பில் 1938 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பைக்கொண்டு, பதிவு செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில், பிரச்சினைகளும் உயிரிழப்புகளும் ஏற்படலாமெனவும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளதோடு, இது தொடர்பில் சட்ட அமலாக்க, சமூக சேவைகளிலுள்ள அதிகாரிகள் நியாயமான நடைமுறைகளை உடனடியாகப் பின்பற்ற வேண்டுமெனவும் தெரிவித்துள்ளது.

வீட்டு வன்முறைகளைத் தடுப்பது தொடர்பில் உடனடியாக ஒருபொறிமுறையை உருவாக்க வேண்டும். அதற்குப் பொலிஸார் ஒத்துழைப்பு அவசியமெனவும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான தேசிய மட்ட செயலணி வலியுறுத்தியுள்ளது.



பக்தர்களின் நேரடி பங்களிப்பு இல்லாமல் நடைபெற்றது

# புனித அந்தோனியார் திருவிழா

கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் வருடாந்த திருவிழா, நேற்று 13ஆம் திகதி, பக்தர்கள் எவரும் நேரடியாக திருத்தலத்துக்கு சமூகமளிக்காத நிலையில், திருவிழாக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

கொரோனா சூழ்நிலை காரணமாக, ஜூன் 3ஆம் திகதி கொடியேற்றம், நவ நாள் ஆராதனைகள், திருவிழா திருப்பலி, திருச்சொரூப ஆசீர்வாதம் என்பன பொதுமக்களின் நேரடி பங்களிப்பு இல்லாமல் நடைபெற்றுள்ளன.

நேற்றைய தினம் காலை எட்டு மணிக்கு பேராயர் கருதினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் திருநாள் சிறப்புத் திருப்பலி மும்மொழிகளிலும் ஒப்புக் கொடுக்கப்பட்டது. கொழும்பு மறைமாவட்ட ஆயர் உட்பட, துணைஆயர்கள் மூவரால் ஒப்பு க்கொடுக்கப்பட்ட இத்திருப்பலியை, தொலைக்காட்சி அலைவரிசைகள், சமூகவலைத்தளங்கள் ஊடாக, பக்தர்கள் வீடுகளில் இருந்தவாறே ஒப்புக்கொடுத்தனர். அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பீடப்பணியாளர் மாத்திரமே, இத்திருநாள் திருப்பலியில் நேரடியாகப் பங்கேற்றிருந்தார்கள்.

அதேவேளை, 2020ஆம் ஆண்டில் நிலவிய கொரோனா வைரஸ் சூழ்நிலையில், புனித அந்தோனியார் திருத்தலத்தின் திருநாள் ஆராதனைகளும் சுகாதாரத் துறையினரின் வழிகாட்டலுக்கு இணங்க, அருட்பணியாளர்கள் மட்டுமே கலந்துகொண்டிருந்ததுடன், பக்தர்கள் திருத்தலத்துக்கு வருகை தந்து தமது பிரார்த்தனைகளை முன்னெடுக்கக்கூடியவாறு, 13 ஆம் திகதி முழுநாளும் திருத்தலம் மக்களுக்காக திறந்து வைக்கப்பட்டிருந்தது. ஆனால், இம்முறை அவ்வாறு திருத்தலம் திறக்கப்படவில்லை. அத்துடன், 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து, அந்த வருடத்திலும் திருவிழா நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை.

இதேபோல், இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ள அந்தோனியார் தேவாலயங்களிலும் திருநாள் திருப்பலிகளும் ஆராதனைகளும் மக்களின் நேரடி பங்களிப்பு இல்லாமல், சமூகவலைத்தளங்கள், தொலைக்காட்சி அலைவரிசை ஊடாக ஒளிஒலிபரப்புச் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# 'நாட்டை முடக்குமளவுக்கு பொருளாதாரம் பலமில்லை'

## தடுப்பூசிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

பிணையில் வந்த ஒருவர், மற்றொருவரைப் பார்த்துப் 'பிணை' எனக்கூறுவது சாதாரணமான ஒன்று. ஐக்கிய மக்கள் சக்தியின் தற்போதைய உறுப்பினர்கள், கடந்த அரசாங்கத்தின்போது அசமந்தமாகச் செயற்பட்டதாலேயே மக்கள் அவர்களை வெளியேற்றியதாகத் தெரிவித்த சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நாட்டை முழுமையாக முடக்குமளவுக்கும் இலங்கைக்குப் பொருளாதார பலமில்லை எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், நாட்டை முழுமையாக முடக்குவது உண்மையில் இலகுவான ஒன்று. ஆனால், அவ்வாறு முடக்குவதற்கு அவுஸ்திரேலியா, நியுசிலாந்து போன்ற நாடுகளைப் போல, நமக்கும் பொருளாதார பலம் இருக்க வேண்டும். ஆனால் இலங்கைக்கு அவ்வாறான பொருளாதார பலம் இல்லை.

அரசாங்கம் எதிர்பார்த்ததைப்போல, நாட்டுக்குத் தடுப்பூசிகள் கிடைக்கவில்லை. தடுப்பூசிகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், தடுப்பூசிகளை தயாரிப்பவர்கள், அவற்றை விநியோகிப்பதில் முறையொன்றைப் பின்பற்றுகிறார்கள்.

தடுப்பூசிகளைத் தயாரிப்போர் அவற்றைத் தனியாருக்கு வழங்குவதில்லை.



எனக்குத் தெரிந்த வகையில், அவற்றை அரசாங்கங்களுக்கே அந்தந்த நிறுவனங்கள் வழங்குகின்றன. தடுப்பூசிகளை எந்த மாகாணத்துக்கு வழங்க வேண்டுமென்பதை, அரசியல்வாதிகள் தீர்மானிப்பதில்லை. அவற்றை சுகாதாரத்துறையினரே தீர்மானிக்கின்றனர் என்று, சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் கூறினார்.

ஆடைத் தொழிற்சாலைகளில்

# பி.சி.ஆர்க்கு முன்பே வேலைக்கு அழைப்பு

பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படும் ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள், பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் கிடைப்பதற்கு முன்பாகவே சேவைகளுக்கு மீண்டும் இணைத்துக்கொள்ள, ஆடைத் தொழிற்சாலையின் உரிமையாளர்கள் நடவடிக்கை எடுப்பதாக, சுதந்திர வர்த்தக வலய பொது ஊழியர் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

இது தொடர்பில், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள அச்சங்கத்தின் இணைச் செயலாளர் கூறியிருப்பதாவது;

பி.சி.ஆர் பரிசோதனைகளின் முடிவுகள் வெளியாவதற்கு முன்னரே ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் பணியாளர்கள் வரவழைக்கப்பட்டமை தொடர்பில், சுமார் 100 முறைப்பாடுகள் சங்கத்துக்குக் கிடைத்துள்ளன.

இதேவேளை, இக்குற்றச்சாட்டுகளை இலங்கை முதலீட்டுச் சபை முற்றாக நிராகரித்துள்ளதோடு, பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளுக்கு முன்னர் எந்தவொரு பணியாளர்களும் சேவைக்கு அழைக்கப்படவில்லை எனவும் அச்சபை தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பில் இருந்து

# ‘டெலோ வெளியேறாது’

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்துசென்று, செயற்படுவதற்கான நிலை, தற்போது வரை ஏற்படவில்லையெனத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் டெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், சில பிரச்சினைகள் கட்சிக்குள் உள்ளன. அவற்றை நிவர்த்தி செய்துகொண்டு, கூட்டமைப்புக்குள் இருந்து செயற்படுவோமெனவும் கூறினார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில், நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அங்கு தொடர்ந்துரைத்த அவர், தற்போதைய அரசாங்கம் இவ்வருட இறுதிக்குள், பாரிய நிதி நெருக்கடிக்குள் தள்ளப்படும் சூழ்நிலையில் காணப்படுகின்றது. அதற்கான முதல் படி எரிபொருள்களின் விலையேற்றத்தைக் கருதலாமெனவும் கூறினார்.

எனவே, அரசாங்கம் உடனடியாக விலையேற்றங்களைக் குறைக்க வேண்டுமெனத் தெரிவித்த அவர், இல்லை என்றால், இவ்வருட இறுதிக்குள் பாரிய நிதி நெருக்கடிக்குள் இலங்கை தள்ளப்படுமெனவும் கூறினார்.

அத்துடன், எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலை, நாட்டுக்குள் கொண்டு வந்ததற்கான நியாயத்தையே அரசாங்கம் கூறுவதாகத் தெரிவித்த அவர், இந்தக் கப்பலின் தற்போதைய நிலையால், மீனவ சமூகம் பாரிய பின்னடைவை சந்திக்கப் போகின்றார்கள் என்பது உண்மை. மன்னார் வளைகுடாவில் கூட, இந்தக் கப்பலின் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

எனவே, ஐயாயிரம் ரூபாய் கொடுப்பதன் ஊடாக, மீனவர்களின் பாரிய வாழ்வாதாரப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய முடியாதென்றும், செல்வம் அடைக்கலநாதன் எம்.பி மேலும் கூறினார்.

தமிழ் மக்களின் கோரிக்கைகள்

# ‘கிழக்கில் நிராகரிப்பு’

■ வி.ரி.சகாதேவராஜா

“கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு, முஸ்லிம் அரசியல்வாதிகளின் கருத்துகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றன” என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் விசனம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மட்டக்களப்பில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றவரும் அரசாங்கத்துடன் நெருக்கமாகவும் உள்ள சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), மட்டக்களப்பு அபிவிருத்திக்குழு உறுப்பினராகவும் இருக்கின்றார். அவரின் முயற்சியால், வாழைச்சேனை பதிவாளர் காரியாலயத்தை, ஓட்டமாவடியில் இருந்து வாழைச்சேனைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார்.

“ஆனால், கடந்த 4ஆம் திகதி, அமைச்சின் செயலாளரால் அந்தக் காரியாலயத்தை மீளவும் ஓட்டமாவடிக்கு மாற்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.



“இதற்குக் காரணம், அரசாங்கத்துடன் இருக்கும் முஸ்லிம் எம்.பிக்களும் எதிர்க்கட்சியில் இருக்கும் முஸ்லிம் எம்பிக்களும் கூட்டாக இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள். “கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பாக, தமிழ்க் கட்சிகள் ஒன்றாகக் கோரிக்கைவிடுத்தும் அது நடந்தபாடில்லை.

“இந்த அரசாங்கத்துடன் இருக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் முன்வைக்கும் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு, எந்த அரசாங்கமும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் கோரிக்கைகளுக்கே முன்னுரிமை வழங்குகின்றன. இதனால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றுப்படுகின்றார்கள்” என்றார்.

பயணக் கட்டுப்பாட்டிலும்

## சூதாடிய 14 பேர் கைது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, மருதநகர் பகுதியில், நேற்று முன்தினம் (12), சூதாட்டத்தில் ஈடுபட்ட 14 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து, 04 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் பணமும் மீட்கப்பட்டுள்ளதாக, கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

பயணக் கட்டுப்பாடு அமலில் உள்ள இவ்வேளையில், ஒன்றுகூடி, சூதாட்டத்தில் சிலர் ஈடுபட்டு வருகின்றமை குறித்துக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, ஸ்தலத்துக்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார், 14 பேரையும் பணத்துடன் கைதுசெய்தனர்.

சந்தேகநபர்களுக்கு எதிராக, வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாகவும், பொலிஸார் கூறினர்.

## கேரளா கஞ்சாவுடன் இளைஞன் கைது

■ அப்துல்சலாம் யாசீம்

தலைமன்னார் பிரதேசத்தில், நேற்று முன்தினம் (12) இரவு, கேரளா கஞ்சாவுடன், 20 வயது இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிடம் இருந்து, 8 கிலோ 619 கிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டதாக, மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இளைஞன் கஞ்சா பொதிகளை, விற்பனைக்காக கொண்டுசெல்லும் போதே,



கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர், தலைமன்னார் பகுதியைச் சேர்ந்தவர் எனவும், இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும், பொலிஸார் கூறினர்.



## கோடா தயாரித்த இளைஞர்கள் கைது

■ எச்.எம்.எம்.பர்ஸான்

கசிப்பு, கோடா தயாரித்த 20, 26 வயதுடைய இரு இளைஞர்கள், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கிரானை, தட்டாவெளி பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 420 லீற்றர் கோடா, 20 லீற்றர் கசிப்பு, இவற்றைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் வாழைச்சேனை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

காத்தான்குடி பொலிஸில்

## மேலும் மூவருக்கு கொரோனா தொற்று

■ எம்.எஸ்.எம்.நூர்தீன், ரீ.எல். ஜவ்பர்கான்

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மேலும் மூவருக்கு, கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு உள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். இவர்களுள் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரும் இரு சிவில் பாதுகாப்பு படைவீரர்களும் அடங்குகின்றனர்.

இம்மாத ஆரம்பத்தில், காத்தான்குடி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 32 பொலிஸாருக்கு கொரோனா தொற்று



உறுதியானதையடுத்து, இங்கு கடமையாற்றிய சில பொலிஸார் சுய தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

பொலிஸ் நிலைய பணிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில், தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

திருவிழாவுக்கு வருவோருக்கு

## ‘சந்தியில் வைத்து அன்டிஜன் பரிசோதனை’

மருதமடு அன்னையின் ஆடி மாத திருவிழாவுக்கு, இம்முறை மன்னார் மறைமாவட்டத்தை தவிர்ந்த ஏனைய வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் வருகை தருவதற்கு அனுமதி இல்லையென, மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

மேலும், ‘வெளியில் இருந்து தேவாலயத்துக்கு வருகின்றவர்கள், மடு சந்தியில் வைத்து அன்டிஜன் பரிசோதனைக்கு உற்படுத்தப்படுவார்கள். அதன் பின்னரே தேவாலயத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்’ என்றும், அவர் கூறினார்.

மன்னார் ஆயர் இல்லத்தில், நேற்று முன்தினம் (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், ஜூலை 2ஆம் திகதியன்று, மருதமடு அன்னையின் ஆடி மாத திருவிழா இடம்பெறவுள்ள நிலையில், ஜூன் 23ஆம் திகதியன்று மடு அன்னையின் ஆடி மாத திருவிழாவுக்கான கொடியேற்றம் நடைபெறவுள்ளதென்றார்.

அதனைத் தொடர்ந்து,



நவ நாள் திருப்பலிகளும் இடம்பெறுமெனத் தெரிவித்த அவர், ஆனால், குறித்த நவ நாள் திருப்பலிகளுக்கு 15 நபர்கள் மாத்திரமே கலந்துகொள்ள முடியுமெனவும் கூறினார்.

‘அதன் பின்னர், ஜூலை 2ஆம் திகதி காலை, திருவிழா திருப்பலி திருத்தலத்தின் முன் பக்கத்தில் இருக்கும் இடத்தில் இருந்து திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

‘திருப்பலியைத் தொடர்ந்து, திருச் சொரூப ஆசீர் வாதமும் வழங்கப்படும். ஆனால் ,நாங்கள் அன்றைய தினம் அதிகமான திருப்பலிகளை நடத்தினாலும், ஒவ்வொரு திருப்பலிகளுக்கும் ஆகக்கூடியது 30 பேர் மாத்திரமே பங்குகொள்ள முடியும்’ என்றும், அவர் கூறினார்.

அத்தோடு, திருவிழா திருப்பலி, தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பப்படுமெனவும் ஆயர் கூறினார்.

முல்லைத்தீவுக்கு

## ‘வலயக் கல்வி பணிப்பாளர் வேண்டும்’

■ நடராசா கிருஸ்ணகுமார்



முல்லைத்தீவு வலயத்துக்கு, வலயக் கல்விப் பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கு, வட மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் தவராசா அமலன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்த வலயக் கல்விப் பணிப்பாளர் ஓய்வுபெற்று சென்று ஒரு மாதம் கடந்த நிலையிலும், இதுவரை புதிய கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை எனச் சாடினார்.

தற்போது, பயணக் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், முல்லைத்தீவு வலயக் கல்வி பணிமனையால் முன்னெடுக்கப்பட வேண்டிய பணிகள் அதிகம் இருப்பதாகத் தெரிவித்த அவர், போரால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைக் கொண்டுள்ள ஒரு வலயத்தின் தேவைகளை நிறைவு செய்கின்ற பொறுப்பு வலயக் கல்வி பணிமனைக்கே உள்ளதெனவும் சுட்டிக்காட்டினார்.

ஆனால், நிரந்தர வலயக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் இல்லாமல் அப்பணிகளை இலகுவில் நிறைவேற்ற முடியாதெனத் தெரிவித்த அவர், எனவே, முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குப் புதிய வலயக் கல்விப் பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கு, வடமாகாணக் கல்வி அமைச்சு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பிரபாகரனின் மீது கரடி தாக்கியது

■ அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை, திரியாய் பகுதியில் வயல் காவலுக்குச் சென்ற நபரொருவர், கரடியின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் நேற்று (13) காலை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திரியாய், கட்டுக்குளம் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கே.பிரபாகரன் (48 வயது) என்பவரே இவ்வாறு கரடியின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

திரியாய் பகுதியில் உள்ள



வயலுக்குக் காவலுக்குச் சென்று உறங்கிய போது, கரடி பாய்ந்து அடித்ததில், காலில் காயம் ஏற்பட்ட நிலையில் புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதேவேளை, கடந்த இரு நாள்களுக்கு முன்னர், யானையின் தாக்குதலுக்கு உள்ளான ஒருவரும் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

அத்துடன், யானைகள், கரடிகளின் தொல்லை அதிகரித்து வருவதாக, திரியாய் பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

உற்பத்திப் பொருட்களில்

## ‘தமிழ் மொழி புறக்கணிப்பு’

■ அ.அச்சுதன்

‘பொன்டெரா’ நிறுவனத்தின் சில உற்பத்திகளில், தமிழ் மொழி தவறவிடப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியதை அடுத்து, தமிழ் மொழிக்கும் முன்னுரிமை வழங்குவதாக அந்நிறுவனத்தின் உயர்மட்டம் உறுதி வழங்கியுள்ளதாக மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் சி.துரைநாயகம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “மும்மொழிக் கொள்கையின் அடிப்படையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் நாட்டில் பயன்படுத்தப்படுகிறது. இந்நிலையில், நாட்டில் விற்பனை செய்யப்படுகின்ற பொருட்களில் அம்மொழிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். எனினும், சில உற்பத்திப் பொருட்களில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக, நியூசிலாந்தை தலைமையகமாகக் கொண்டு இலங்கையிலும் கிளையைக் கொண்டு இயங்கிவரும் ‘பொன்டெரா’ நிறுவன உற்பத்திப் பொருட்கள் சிலவற்றில் சிங்களம், ஆங்கிலம், சீன மொழிகள் முன்னுரிமைப்



**‘பொன்டெரா’ நிறுவன உற்பத்திப் பொருட்கள் சிலவற்றில் சிங்களம், ஆங்கிலம், சீன மொழிகள் முன்னுரிமைப் படுத்தப்பட்டு, தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகிறது**

படுத்தப்பட்டு, தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகிறது.

இது தொடர்பாக, ‘பொன்டெரா’ நிறுவனத்தின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு எழுத்து மூலமான கோரிக்கையை, கடந்த 10ஆம் திகதி நாம் அனுப்பியிருந்தோம். இது தொடப்பாக, சாதகமான பதிலை சம்பந்தப்பட்ட நிறுவனம் எமக்கு மறுநாளே (11) அனுப்பியுள்ளது.

அதில், ‘சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளை பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்கின்றோம்’ என அவர்கள் உறுதி அளித்துள்ளார்கள்” என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு

## ‘வாகன இறக்குமதி தேவையா?’

■ ஹஸ்பர் ஏ ஹலீம்



தற்போதைய நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகன இறக்குமதிக்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு தேவையா என தேசிய விடுதலை மக்கள் முண்னணியின் தலைவர் முஸம்மில் முகைதீன் கேள்வி எழுப்பினார். இது மக்களின் பணமே என்றும் கொவிட் - 19 தடுப்பூசிக்கு மக்கள் தடுமாறும் இந்த நிலையில், அரசாங்கம் செயற்படுவது தவறு என்றும் அவர் தெரிவித்தார்.

முள்ளிப்பொத்தானையில் உள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் (12) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துரைக்கையில், “கொவிட் - 19 தடுப்பூசி வாங்குவதற்கு பணம் இல்லாத போது, 225 பாராளுன்ற உறுப்பினர்களுக்கும் சொகுசு வாகனங்கள் தேவையா? மக்கள் இதனை நன்கு சிந்திக்க வேண்டும். இந்த வாகனக் கொள்வனவு செய்ய முன் வந்திருப்பது, ஒரு மடமைத்தனமான விடயமாகும். மக்களின் தேவைகளுக்குப் பணத்தைப் பயன்படுத்தாமல், வாகனங்கள் கொள்வனவுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

“பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருவர் கூட இதை வேண்டாம் என்று வாய் திறந்து சொல்லவில்லை. இதைத் தட்டிக் கேட்பதற்கும் பலமான எதிர்க்கட்சி இந்த நாட்டில் இல்லை” என்றார்.



■ எம்.றொசாந்த், என்.ராஜ்

யாழில் திடீர் மழை;

## ‘55 பேர் பாதிப்பு’

**இரவு 8 மணி முதல் 10 மணி வரை கடும் காற்றுடன் கூடிய மழையால் 17 குடும்பங்களைச் சேர்ந்த 55 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில், நேற்று முன்தினம் (12) இரவு பெய்த காற்றுடன் கூடிய மழை காரணமாக, 17 குடும்பங்களைச் சேர்ந்த 55 பேர் பாதிக்கப்பட்டுள்ளனரென, யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், யாழ்ப்பாண மாவட்டத்தில், நேற்று முன்தினம் (12) இரவு 8 மணி முதல் 10 மணி வரை கடும் காற்றுடன் கூடிய மழை பெய்ததாகவும் இதனால், 17 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், சிறுதொழில் முயற்சியாளர்கள் மூவர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பாதிப்புகள் தொடர்பான விவரங்கள், சகல பிரதேச செயலகங்கள் ஊடாகவும் யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் சேகரிக்கப்பட்டு, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், சூரியராஜ் கூறினார்.

ஓல்டனில் பொலிஸ் காவலரண் அமைத்தல்

# ‘கைவிடப்பட்டது’

## ஜீவனின் தலையீட்டால் உறுதியானது

■ ஆ.ரமேஸ்



மஸ்கெலியா, ஓல்டன் தோட்டத்தில் பொலிஸ் காவலரண் அமைக்கும் நடவடிக்கை, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் தலையீட்டால் கைவிடப்பட்டுள்ளது.

ஓல்டன் தோட்டத்தில் கடந்த பெப்ரவரி மாத முதல் பகுதியில் தோட்ட நிர்வாகத்துக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியதுடன், பல தாக்குதல் சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு அமைய, பெண் தொழிலாளர்கள் உள்ளிட்ட பலர் கைதுசெய்யப்பட்டு, பிணையில் விடுதலையாகியிருந்தனர்.

சம்பவம் தொடர்பாக ஹட்டன் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்று வரும் நிலையில், ஓல்டன் தோட்டத்தில் பொலிஸ் பாதுகாப்பு அரண் ஒன்றை அமைக்க ஹட்டன் பொலிஸ் தலைமையகம் ஏற்பாடுகளை செய்திருந்தது.

எனினும், இதற்கு ஓல்டன் தோட்ட மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்துக்கும் கொண்டுவந்தனர்.

இவ்விடயம் தொடர்பில், ஹட்டன் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கும் இராஜாங்க அமைச்சருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலையடுத்து, ஓல்டன் தோட்டத்தில் பொலிஸ் காவலரண் அமைக்கும் நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளதாக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுதியளித்துள்ளது.



# ‘பொது மயானத்தை கையகப்படுத்த முயற்சி’

## அம்பகமுவ தவிசாளர் மீது குற்றச்சாட்டு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

அம்பகமுவ பிரதேச சபைக்குட்பட்ட கினிகத்தேன, ரஞ்சுராவ பிரதேசத்திலுள்ள பொது மயானத்தின் ஒரு பகுதியை, அம்பகமுவ பிரதேச சபையின் தவிசாளர் ஜயசங்க பெரேரா கையகப்படுத்த முயல்வதாக, அச்சபையின் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் மஞ்சுல சுரவீர ஆராச்சி குற்றஞ்சாட்டினார்.

100 வருடங்கள் பழைமையான இந்த மயானம், பயணக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் தவிசாளரால் துப்புரவு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு துப்புரவு செய்யப்படும் பகுதியில் வர்த்தக நிலையங்களை அமைக்கத் தவிசாளர் திட்டமிட்டு உள்ளாரெனவும், அவர் சாடினார்.

ஹட்டன்- கொழும்பு பிரதான வீதிக்கு அருகில் அமைந்துள்ள இந்தப் பொது மயானம், 2 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. கினிகத்தேன, களுகல, பிட்டவல், மில்லகஹமுல்ல, ரம்பாதெனிய உள்ளிட்ட பல பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள், இந்த மயானத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்த விடயம் தொடர்பில், அம்பகமுவ பிரதேச சபையின் தவிசாளர் ஜயசங்க பெரேராவிடம் வினவியபோது,

“என்னுடைய பிரதேச சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் இந்த மயானம், பிரதான வீதியின் எல்லையில் அமைந்துள்ளது. இதனை சிலர் வேறு தேவைகளுக்காக அனுமதியின்றிப் பயன்படுத்துகின்றனர். எனவேதான், மயானத்தின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் வேலி அடைத்துள்ளோம். தற்போது, துப்புரவு செய்யப்பட்ட பகுதியானது, பிரதேச சபைக்கு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில், பிரதேசத்திலுள்ள சுய தொழிலாளர்களுக்கான வர்த்தக நிலையங்களை அமைக்கத் திட்டமிட்டு உள்ளோம்” என்றார்.

புகைப்பொருள் விற்பனை;

# கடையை இழுத்து மூடிய பொலிஸார்




■ ரஞ்சித் ராஜபக்ஷ

அத்தியாவசிய சேவைக்கென நிறுவனமொன்றின் பிரதானியால் வழங்கப்பட்டிருந்த அனுமதிக் கடிதத்தைப் பயன்படுத்தி, ஹட்டன் நகரில் திறந்து வைக்கப்பட்டிருந்த புகைப்பொருள் விற்பனை நிலையமொன்றை மூடுவதற்கு, ஹட்டன் பொலிஸார், நேற்று முன்தினம் (12) நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இந்த வர்த்தக நிலையம், நேற்று முன்தினம் காலை முதல் திறக்கப்பட்டு, புகைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக ஹட்டன் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, வர்த்தக நிலையத்தை மூட பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.




## பாம்பேகமவை பாருங்கள்....



கேகாலை, தெஹியோவிட்ட பிரதேச செயலகத்துக்கு உட்பட பாம்பேகம தோட்ட மக்கள், இன்றும் மின்சார வசதி இல்லாமல் மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் வாழ்ந்து வருகிறார்கள். அன்றாடம் கூலி வேலை செய்யும் இவர்களின் வருமானம் குடும்ப செலவுக்கே போதாத நிலைமையில், தற்போது மண்ணெண்ணெயின் விலையேற்றமும் இவர்களுக்கு மற்றுமொரு பேரிடியாக மாறியுள்ளது. (படப்பிடிப்பு – அருள்ஷான்)



உரத்தை அதிக விலைக்கு விற்ற

# வர்த்தக நிலையம் முற்றுகை

■ சேஹ்ன் செனவிரத்ன

விவசாயிகளுக்கு நிவாரண விலையின் கீழ் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டிருந்த ஒரு தொகை உரத்தை, அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தக நிலையமொன்று சுற்றிவளைக்கப்பட்டது.

கண்டி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, கண்டி, ஹதரலியந்த பிரதேசத்தில் உள்ள உர விற்பனை நிலையத்தை, கண்டி நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் சுற்றிவளைத்தனர்.

இதன்போது 1,500 ரூபாய்க்கு விற்கப்பட வேண்டிய 50 கிலோ கிராம் நிறையுடைய உரத்தை, 3,000 ரூபாய்க்கு விற்கப்பட்டமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து, இவ்வாறு அதிக விலைக்கு உரத்தை விற்பனை செய்த குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளரை, நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தீயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# உதவிக்கரம்

■ நீலமேகம் பிரசாந்த்

நானுஓயா, சமர்செட் தோட்டப்பகுதியில் லயன் குடியிருப்பு ஒன்றில் கடந்த மாதம் 23ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்தில் 8 குடும்பங்கள் முற்றாகப் பாதிப்புக்குள்ளாகின.

இந்தக் குடும்பங்களை நேரில் சென்று சந்தித்த சமூக சேவகரும் நானுஓயா ரேஹா ஸ்டீல் உரிமையாளருமாகிய எஸ். திருச்செல்வம், உலர் உணவுப் பொருள்களை வழங்கினார்.



தடுப்பூசி ஏற்றுவதில்

# மாற்றாந்தாய் மனப்பான்மை ஏன்?

## கால்நடை மருத்துவர்கள் கேள்வி

■ சேஹ்ன் செனவிரத்ன




கொவிட் - 19 தடுப்பூசி ஏற்றும் விடயத்தில் கால்நடை மருத்துவர்களும் பணியாளர் குழுவும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கப்படுவதாக, அரச கால்நடை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தவிசாளர் வைத்தியர் நளின் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வரும் நிலையில், எவ்வித சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்களும் வழங்கப்படாத பின்னணியில் உள்ள தமக்கும், கொரோனா தடுப்பூசிகளைச் செலுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில் கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், அவர் மேலும் தெரிவிக்கையில்,

**“ பண்ணைகளுக்குச் சென்று, தேவையான சிகிச்சைகளை மேற்கொள்ளும் போது, மூன்றாம் தரப்பினரின் ஒத்துழைப்பை பெறுவது அவசியமாகும். இந்த நிலையில்....**

“கால்நடை பண்ணைகளுக்குச் சென்று, கால்நடைகளுக்குத் தேவையான சிகிச்சைகளை மேற்கொள்ளும் போது, கால்நடைகளின் உரிமையாளர் அல்லது மூன்றாம் தரப்பினரின் ஒத்துழைப்பை பெறுவது அவசியமாகும்.

“இந்த நிலையில், சமூக இடைவெளியைப் பேணுவது என்பது கடினமான விடயம். இதனால் கால்நடை மருத்துவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது” எனச் சுட்டிக்காட்டினர்.

எனவே, அரச கால்நடை மருத்துவர்கள் 800 பேர் உட்பட பணிக்குழு உறுப்பினர்கள் 6,000 பேருக்கும் உடனடியாக கொரோனா தடுப்பூசியை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

சென். ஜோசப் பாடசாலையை

# ‘தேசிய பாடசாலைகள் பட்டியலிலிருந்து நீக்கியமை அநீதியாகும்’

## ரணிலுக்கு ‘தீர்க்கதரிசி’ என்று புகழாரம்

■ நீலமேகம் பிரசாந்த்



“மஸ்கெலியா சென். ஜோசப் பாடசாலையை, தேசிய பாடசாலைகள் பட்டியலில் இருந்து நீக்கியமை பாரிய அநீதியாகும்” என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், “மஸ்கெலியா சென். ஜோசப் கல்லூரி, வருடாந்தம் கல்வியற் கல்லூரி, பல்கலைக்கழகம் என பல மாணவர்களை அனுப்புகிறது. எனவே, மஸ்கெலியா பாடசாலையை மீண்டும் தேசிய பாடசாலையாக அறிவிக்க, சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.

அத்துடன், “நல்லாட்சி காலத்தில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடாக ஒவ்வொரு பாடசாலையிலும் இணைய வழி மூலம் கல்வியைத் தொடர்வதற்கு கணினிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது” எனத் தெரிவித்த அவர், “ரணில் அன்றே தீர்க்க தரிசனத்துடன் எதிர்காலத்தை சிந்தித்து, திட்டங்களை வகுத்தார்” என்றார்.

மேலும், “நல்லாட்சி அரசாங்கம் மாற்றப்பட்டதும் அத்திட்டத்தை செற்படுத்த முடியாமல் போய்விட்டது. ஆனால், தற்போது இணையவழிக் கல்வியே மாணவர்களுக்குத் தேவைப்படுகின்றது” என்றார்.

இதேவேளை, நல்லாட்சி அரசாங்க காலத்தில், மஸ்கெலியா பகுதியில் மஸ்கெலியா சென். ஜோசப் பாடசாலை உட்பட கவரவல பாடசாலை, ப்ளூம்பீல்ட் பாடசாலை, ஹட்டன் சென். பொஸ்கோ பாடசாலைகளை தேசிய பாடசாலைகள் பட்டியலில் உள்ளடக்கத் திட்டமிட்டிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மழைக்கு ஒதுங்கிய

# இளைஞர்களுக்கு நேர்ந்த கதி

■ ரஞ்சித் ராஜபக்ஸ



பாரிய மரமொன்றின் கிளை முறிந்து பஸ் தரிப்பிடத்தில் வீழ்ந்ததால், இளைஞர்கள் மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், பஸ் தரிப்பிடமும் முற்றாக சேதமடைந்துள்ளது.

ஹட்டன்- நோட்டன்பிரிஜ் பிரதான வீதியில், காசல்றீ நீர்த்தேக்கத்துக்கு அருகில் நேற்று முன்தினம் (12) மாலை 5.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அப்பகுதியில் கடும் மழை பெய்தமையால், இளைஞர்கள் மூவரும் பஸ் தரிப்பிடத்துக்குள் ஒதுங்கியிருந்த போதே, இந்த அனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இதனையடுத்து, பிரதேசவாசிகள், இளைஞர்களை மீட்டு, கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதித்துள்ள நிலையில், ஓர் இளைஞர், மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# பற்றியெரியும் வாழ்க்கைக்குள் ‘கூத்தாடும்’ கூட்டுப்பொறுப்புகூறல்

அரசியல் கலப்பில்லாத ஒருவர் சிம்மாசனத்தில் ஏறியபோது, ஒவ்வொருவருடைய வாழ்வும் பிரகாசிக்கப் போகிறது என்றிருந்த நினைப்பை, மூட்டைக்கட்டும் வகையில், எடுக்கப்படும் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. எதிரணி குற்றஞ்சாட்டுவதைப் போல, ‘வர்த்தமானி அரசாங்கம்’ என்ற பட்டப்பெயரை உறுதிப்படுத்திக் கொண்டுவருகிறது.

கொரோனாவின் மூன்றாவது அலைக்குப் பின்னரான பயணக்கட்டுப்பாடுகளால், ஒருசில வீடுகளில் அடுப்பு எரிவதே இல்லை. இன்னும் சிலர் அரைவயிற்றையும் கால்வயிற்றையும் நிரப்பிக்கொண்டு, கூரைகளை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கின்றனர். பக்கத்து வீடுகளில் கையேந்துவதற்குக் கூட மனமில்லாது பலரும் இருகின்றனர். இந்த வயிறுகள், கட்டாயம் எரிந்துகொண்டுதான் இருக்கும்; இந்த வயிறுகளுக்குப் பாலை வார்க்காது, எரிபொருள்களின் விலைகளை அதிகரித்து, ‘எண்ணெயை’ வார்த்துள்ளது அரசாங்கம்.

மக்கள் துன்பத்தில் துவண்டு கொண்டிருக்கையில், ஓரளவுக்கேனும் நிவாரணங்களை வழங்கி, மனக்காயங்களை ஆற்றவேண்டும். இங்குதான், அரசாங்கத்தின் கூத்தாட்டம் அம்பலமாகியுள்ளது. வாழ்க்கைச் செலவு தொடர்பிலான உப-குழுவில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அமைச்சர்கள் பலர் அங்கம் வகிக்கின்றனர். அக்குழுவே, எரிபொருள்களின் விலைகளைத் திருத்துவதற்கு அங்கிகாரமளித்து இருந்தது. ஆக, அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்புகூறல் பின்பற்றப்பட்டுள்ளது.

அந்த அங்கிகாரத்துடன் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. இதையடுத்து, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர், தனது பதவியை இராஜினாமா செய்யவேண்டுமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி, அறிக்கை ஒன்றை வெளியிட்டிருப்பது, ‘பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டிவிடுவது’ போன்றதாகும்.

மக்களை முட்டாள்களென நினைத்துக் கொண்டிருப்போருக்கு, இவ்வாறான அறிக்கைகள் இனிப்பூட்டுவதாய் அமையலாம். ஆனால், குடிமகனின் துன்பங்களைப் புரிந்து தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

கொரோனாவின் பெருந்துன்பக் காலப்பகுதியில், தொழிற்சாலைகள் இயங்கவில்லை; வாகனப் போக்குவரத்தும் குறைந்திருந்தது. எனவே, எரிபொருள்களின் பாவனையும் குறைந்திருக்கும்.

ஆனால், சாதாரண பொதுமக்கள் பயன்படுத்தும் மண்ணெண்ணையின் பாவனை, வழமையை விடவும் அதிகரித்தே இருந்திருக்கும். அப்படியாயின், எரிபொருள் விலை அதிகரிப்பு, ஆகக் கூடுதலாகப் பாவனையாளர்களின் வயிற்றிலடிக்கும் செயற்பாடாகும்.

உப-குழு அங்கிகாரமின்றி, அமைச்சரவையின் ஒப்புதலின்றி, அமைச்சரொருவர் தான்தோன்றித்தனமான தீர்மானத்தால் விலைகள் அதிகரிக்கப்பட்டு இருக்குமாயின், அமைச்சரை பதவிவியிலிருந்து விலக்கவேண்டும்.

அமைச்சரவையை மறுசீரமைக்கும் முழுமையான அதிகாரம், ஜனாதிபதிக்கு இருக்கிறது. அப்படியாயின் விலையை கூட்டிய அமைச்சரை அகற்றிவிட்டு, புதிய அமைச்சரை நியமித்திருக்கலாம். ஆனால், அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவே, அறிக்கைவிடுவது மக்களை ஏமாற்றும் கூத்தாகும்.

கூட்டுப்பொறுப்புக்கூறலின் பிரகாரம், மக்களின் மீது மென்மேலும் சுமையைச் சுமத்தும் தீர்மானங்களை எடுக்காது, எரிபொருள்களின் விலையைக் குறைக்கவேண்டும் என்பதே எமது வலியுறுத்தலாகும்.


## தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

காலத்தின் பார்வை தீட்சண்யமானது. கண்ணுக்குப் புலனாகாத நேரங்களில், என்னென்னவோ நடந்து விடுகின்றன.

ஆனால், தன்னைத்தான் நம்பி, தீவிரமாகக் கஷ்டப்பட்டு உழைப்பவர்களை, காலம் கைவிடுவதில்லை. சிலசமயம், பலன் கைகூடுவதற்கு நாள்கள் பிந்தலாம்.

சாதாரண காரியங்களைக் கூட, செய்து முடிக்காமல் நாள்களைக் கடத்தினால், காலம் காத்திருப்பதில்லை. இதற்கான தண்டனை வழங்கப்படும்.

கால நேரங்களுக்கு கௌரவம் அளிப்பீராக! எல்லோருக்குமே நேரம் பொதுவானது. நேரத்தைத் தவறவிடாது, உரியமுறையில் செய்துமுடித்தால், இயற்கையாகவே வெற்றிகள் வந்து சேரும்.

சோம்பல், காலத்தைப் பகைத்தது போலாகும். செயற்கரிய பல செயல்களை ஆர்வத்துடன் செய்யும்போது, நாங்கள் நினைத்ததைவிட மேலாகப் பயன்தரும்.

மகிழ்ச்சியைத் தேடுபவர்கள், செய்கடமைகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும். கடவுளின் ஆசியைப் பெற வேண்டுமாயின், சுறுசுறுப்புடன் இயங்குவீர்களாக.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# திணறும் ஆளுங்கட்சி; திக்குத் தெரியாத எதிர்க்கட்சி



என்.கே. அஷோக்பரன்

எரிபொருள் விலை அதிகரிப்புத்தான் இந்த வாரத்தின் மிகப்பெரிய பரபரப்பு. இலங்கையின் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, பெட்ரோல், டீசல் ஆகிய எரிபொருட்களின் விலை அதிகரிப்பு பற்றி அண்மையில் அறிவித்திருந்தார்.

விலை அதிகரப்பு எனும் போது, ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் அதிகரிப்பு அல்ல. பெட்ரோல் விலை ஒரேயடியாக, 20 ரூபாய்க்கும் அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதற்கு, உதய கம்மன்பில தரப்பு சொல்லும் நியாயம் விநோதமானது. இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகளின் எரிபொருள் விலையைவிட, இலங்கையில் எரிபொருள் விலை குறைவு என்பதாகும்.

இந்த அபத்தமான வாதம் ஒருபுறமிருக்க, மறுபுறத்தில், இந்த விலையேற்றத்துக்கான உண்மையான காரணத்தைப் பார்க்கும் போது, உலக சந்தையில் ‘கச்சா’ எண்ணை விலையேற்றம் ஏற்பட்டுள்ளமையை, அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஆனால், கடந்த வருடம் உலக சந்தையில் ‘கச்சா’ எண்ணை விலை, கடுமையாக வீழ்ச்சி கண்டிருந்தது. உலக சந்தையில் விலை கூடும் போது, உள்ளூரில் விலையை ஏற்றும் அரசாங்கம், உலக சந்தையில் விலை கடுமையாக வீழ்ச்சியடையும் போது, அதன் பலனை, இலங்கை மக்களுக்கு ஏன் வழங்கவில்லை என்ற கேள்வி எழுவது நியாயமானதே!

ஆனால், இந்த விடயம் இதோடு நிற்கவில்லை. உதய கம்மன்பில, எரிபொருள் விலையேற்றத்தை அறிவித்ததன் பின்னர், இந்த விலையேற்றத்தைக் கண்டித்தும், விலையை ஏற்றாது சமாளிக்க முடியாதுபோன அமைச்சரின் இயலாமையைக் காரணம் காட்டி, அவரைப் பதவி விலகக் கோரியும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி, பகிரங்க அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

ஆம்! ஆளுங்கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவேதான் இவ்வாறு அறிக்கையை வெளியிட்டுள்ளது. கம்மன்பில பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினரல்ல; அவர் பங்காளிக் கட்சியான பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர். உதய கம்மன்பிலவுக்கும் பொதுஜன பெரமுவுக்கும் இடையிலான முரண்பாடுகளை, சிலமாதங்களாகவே அவதானித்து வரும் நிலையில், தமது ஆட்சியின் பங்குதாரியான கம்மன்பிலவை பதவிவிலகுமாறு, பிரதான ஆளுங்கட்சியாக பொதுஜன பெரமுன பகிரங்கமாகக் கேட்டுக்கொண்டுள்ளது.

ஆனால், பொதுஜன பெரமுனவுக்கும் கம்மன்பிலவுக்கும் இடையிலான முரண்பாடு மட்டும்தான், இதற்குக் காரணம் என்று கருதிவிடக் கூடாது. கம்மன்பில இங்கு ஒரு பலிகடாவாகப் பயன்படுத்தப்படுகிறார் என்பதும் கவனிக்கப்பட வேண்டியது.

‘கொவிட்-19’ பெருந்தொற்றின் மூன்றாவது அலை, இலங்கையைப் பயங்கரமாகத் தாக்கிக் கொண்டிருக்கிறது. உறுதியான நடவடிக்கைகள் மூலம், ஒழுக்கமான ஆட்சியை வழங்குவார்கள் என்ற மக்களின் எதிர்பார்ப்பு, பாராளுமன்றத் தேர்தல் வெற்றிக்குப் பின்னரிருந்தே தோற்றுக் கொண்டிருக்கிறது.

எந்த முடிவையும், உறுதியாக எடுக்க முடியாத அரசாங்கமாகவே இது இருக்கிறது. குறைந்த பட்சம், பயணக் கட்டுப்பாடுகளை நீடிப்பதா, தளர்த்துவதா என்பதைக்கூட, சரியாக முடிவெடுக்க முடியாமல், முதல் நாள் ஒரு கதை, மறுநாள் வேறு கதை எனத் தானும் குழம்பி, மக்களையும் குழப்பிக் கொண்டிருக்கிறது.

மறுபுறத்தில், பொருளாதார சிக்கலைச் சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது. முதல் முறை இந்தியா, நாணய பிரதியீட்டின் ஊடாகக் காப்பாற்றியது; அடுத்த முறை, சீனா கடன் கொடுத்துக் காப்பாற்றியது. அடுத்த முறை, கையேந்த இடமில்லாமல், பங்களாதேஷிடம் போய் கையேந்தி, நாணய பிரதியீட்டைப் பெற்றுக்கொண்டு, செலுத்த வேண்டிய கடன்களைத் திக்கித் திணறிச் செலுத்திக் கொண்டிருக்கிறது.

இலங்கையின் கடன் தரமதிப்பீடு, மிகக் குறைந்துள்ள நிலையில், அந்நிய முதலீடுகளுக்கான வாய்ப்புகளும் மிகச் சுருங்கியுள்ளன. இந்த நிலைமையில், சீனாவிடம் தஞ்சமடைய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. சீனாவிடம் கடன்வாங்கி, சீனக் கடன் பொறிக்குள் சிக்கிச் சின்னாபின்னமாகும் நிலைதான் ஏற்பட்டுள்ளது.

இதுதான், அரசாங்கத்தின் பொருளாதாரம், வெளிநாட்டுக் கொள்கையென்றால், இதை ஒரு குழந்தையே செய்துவிட்டுப் போய்விடுமே! இதற்கு எதற்கு, ‘வீரர்கள்’ என்ற கூச்சலும், ‘நிபுணர்களின் ஆட்சி’ என்ற வெற்றுக் கோஷமும் வேண்டிக்கிடக்கிறது?

இந்த ஆட்சி, சறுக்கிக்கொண்டிருக்கும் ஒவ்வோர் இடத்தைப் பார்த்தாலும், அந்தச் சறுக்கலைத் தவிர்ப்பதற்கு, அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியைவிட, அந்தச் சறுக்கலை மறைக்க எடுத்துக்கொண்ட பிரயத்தனம்தான், மிக அதிகமாகத் தெரிகிறது. உதாரணமாக, ‘லிட்ரோ’ எரிவாயு சிலிண்டரின், எரிவாயுவின் எடை அளவைக் குறைத்து, விலையை ஏற்றாமல்செய்த ஏமாற்று வேலை ஆகும்.

உள்ளூர் விவசாயத்தை ஆதரிக்கிறோம் என்று, இறக்குமதிகளைத் தடைசெய்துவிட்டு, தற்போது பொருட்களின் விலைகள் படுபயங்கரமாக ஏறியுள்ள நிலையில், இந்நாட்டின் அப்பாவி மக்கள்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அரிசியின் விலை, மஞ்சளின் விலை, ஏலக்காயின் விலை என விலையேற்றம் அதிகரித்துள்ளது. உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான வழி, வெளிநாட்டு இறக்குமதிகளைத் தடைசெய்வதல்ல; இது ஓர் ஆதிகால முறை; அறியாமையின் வழி.

உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதானால், அதன் போட்டித்தன்மையை அதிகரிக்கும் வினைதிறனான உற்பத்தி முறைகள், நவீன விவசாய முறைகள், நுட்பங்கள் உள்ளிட்ட நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும் நடைமுறைப்படுத்தவும் வேண்டும். உற்பத்தியாளனிடமிருந்து, நுகர்வோரை இலகுவில், குறைந்த செலவில் சென்றடையக் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

அவ்வாறுதான், உள்ளூர் உற்பத்திகளை நீடித்துநிலைக்கத்தக்க முறையில் ஊக்குவிக்கலாமேயன்றி, இறக்குமதிகளைத் தடுப்பதால் அல்ல. 10ஆம் ஆண்டு மாணவனுக்கு உள்ள பொருளாதாரம் பற்றிய புரிதல் அளவை மட்டும் கொண்டு, ஒரு நாட்டின் பொருளாதாரத்தை நிர்வகிக்க திட்டமிட்டால், இதுபோன்ற நிலைமைகள் உருவாகலாம்.

அரசாங்கம், இப்படி மாறி மாறி சறுக்கிக்கொண்டிருக்கும் போது, பிரதான எதிர்க்கட்சி என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி, சக்தி இழந்து நிற்கிறது.

ஜனநாயக நாடொன்றில், ஓர் எதிர்க்கட்சி ஆற்ற வேண்டிய அடிப்படைப் பணிகளைக் கூட, முறையாகச் செய்யத் திராணியற்ற வாய்ச்சொல் அமைப்பாகவே, இது இருக்கிறது. இன்று அரசாங்கத்தின் அபத்தமான நடவடிக்கைகளை விமர்சிப்பதற்குப் பதிலாக, ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்துக்கு வரப்போவதை விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்க வருவதைக் கண்டு, இவர்கள் அச்சப்படக் காரணம், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையோடு அதிருப்தி கொண்டவர்கள், ரணில் விக்கிரமசிங்கவுடன் கைகோர்த்து விடுவார்களோ என்ற அச்சம்தான்,

இவ்வளவு காலமும் ரணிலைப் பலமற்ற தலைவர் என்று விமர்சித்தவர்கள்தான், இன்று தாம் எவ்வளவு பலமற்றவர்கள் என்பதை, மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

ஒரு கட்சிக்குத் தேவையான அடிப்படைகள் எதுவும் ஐக்கிய மக்கள் சக்தியிடம் இல்லை. ஏனெனில், தாம் ஒரு கட்சியா, கூட்டணியா என்பதிலேயே அவர்களிடம் தெளிவின்மை காணப்படுகிறது.

ரணிலின் பாராளுமன்ற வருகையோடு, ஐக்கிய மக்கள் சக்தியினரின் பாதுகாப்பின்மை உணர்வு, இன்னும் அதிகரிக்கும். எதிர்க்கட்சிக்குள் அடிக்கத் தொடங்கியிருக்கும் இந்தப் புயல், அவர்களது உட்கட்சி முரண்பாடுகளை அதிகரிக்கும். அவர்கள் ஆளுங்கட்சியோடு முரண்படுவதை விடுத்து, தமக்குள் அதிகம் அடிபடத் தொடங்குவார்கள். இது நிச்சயம், ஆளுந்தரப்புக்குச் சாதகமானதாகவே அமையும்.

ஒரு வகையில், தமது எல்லா நடவடிக்கைகளிலும் தோற்றுக்கொண்டிருக்கும் ஓர் ஆளுங்கட்சியைக் காப்பாற்றும் கைங்கரியத்தைத்தான், இங்கு பிரதான எதிர்க்கட்சி செய்து கொண்டிருக்கிறது.

இந்த இடத்தில்தான், இலங்கை அரசியலில் மிகப்பெரியதொரு வெற்றிடம் உணரப்படுவதை, உண்மையில் அவதானிக்கலாம். இந்தத் திறமையும், திராணியுமற்ற அரசியல் தலைமுறையிடமிருந்து, இந்த நாடு பாதுகாக்கப்படாவிட்டால், இந்த நாட்டுக்கு எதிர்காலம் என்ற ஒன்றே இல்லாது போய்விடும்.

அரசியல் என்பது ஒரு பொறுப்பு மிக்க பணி. ஆழ்ந்த அறிவும் ஆற்றலும் வினைதிறனும் நல்லெண்ணமும் இங்கு அத்தியாவசியம். ஒரு நிறுவனத்தில் பணியாற்றக்கூடத் தகுதியில்லாதவர்கள், ஒரு நாட்டை நிர்வகிக்கிறார்கள் என்றால், அந்த நாடு உருப்படுமா என்பதை யோசிக்க வேண்டும்.

நீங்கள் ஒரு நிறுவனத்துக்குச் சொந்தக்காரர் எனில், அந்த நிறுவனத்தை நிர்வகிக்க இந்த அரசியல்வாதிகளில் எவரைத் தேர்ந்தெடுப்பீர்கள் என்று உங்களுக்குள் நீங்களே சிந்தித்துப் பாருங்கள்; அப்போது புரியும் இந்நாட்டின் அவல நிலை.

## கழுதங்கள்

### தென்னியங்குளத்தில் குடிநீர் நெருக்கடி

முல்லைத்தீவு, தென்னியங்குளம் கிராமத்தில் குடிநீர் நெருக்கடி நிலவுகிறது. துணுக்காய் பிரதேச சபையால், ஆண்டு தோறும் ஜூன், ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில், குடிநீர் விநியோகம் செய்வது வழமையாகும்.

பிரதேச சபையிடம் இவ்வாண்டு குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ளக் கூடிய வகையில், வாகன வசதி இல்லாததன் காரணமாக, தென்னியங்குளத்துடன் எட்டு கிராமங்களும் குடிநீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

குடிநீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கு, துணுக்காய் பிரதேச செயலகம், துணுக்காய் பிரதேச சபை ஆகியவை இணைந்து, நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தென்னியங்குளம் கிராம மக்கள், எதிர்பார்க்கிறார்கள். ஆண்டு தோறும் குடிநீர் நெருக்கடியை எதிர்கொள்ளும் தென்னியங்குளம் போன்ற கிராமங்களுக்கு, நிரந்தர குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தென்னியங்குளம் கிராம மக்கள் யானைகளின் தொல்லையை எதிர்கொண்டு வருவதாகவும் துணுக்காய் பிரதேச செயலகத்துக்குத் தகவல் வழங்கப்பட்டும், பிரதேச செயலகம் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனவும் தென்னியங்குளம் கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். எனவே, மேற்குறிப்பிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறும் கேட்டுக்கொள்கின்றார்கள்.

நடராசா கிருஸ்ணகுமார்



நீர், சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு

# அமெ.டொ. 40 மில். மேலதிக நிதியுதவி

இலங்கையின் ஏழு மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் நீர் விநியோகம், கழிவறை, சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக மேலதிகமாக 40 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க, உலக வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர் சபை அனுமதியளித்துள்ளது. நீர் விநியோகம், கழிவறை வசதிகள் மேம்படுத்தல் திட்டம் (WASSIP) ஊடாக, இந்த உதவியை வழங்க முன்வந்துள்ளது.

நாட்டின் மேல், தென், வட மாகாணங்களில் மேற்குறிப்பிட்ட வசதிகளை மேம்படுத்துவதற்கு இந்த நிதி உதவி வழங்கப்படும். இந்தத் திட்டத்தினூடாக பதுளை, நுவரெலியா, கேகாலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, இரத்தினபுரி, மொனராகலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 310,000 பேரை சென்றடைய உள்ளது. இந்தத் திட்டத்தினூடாக, சுமார் 80 நீர் விநியோக கட்டமைப்புகள் பூர்த்தி




செய்யப்படவுள்ளதுடன், 18,000 க்கும் அதிகமான கழிவறைகள், 30 பாடசாலைகளுக்கு வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

1998 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் பின்தங்கிய, கிராமிய மற்றும் பெருந்தோட்ட பகுதிகளில் பாதுகாப்பான குடிநீர், கழிவறை வசதிகளை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் மூன்றாவது நீர் சார்ந்த திட்டமாக WASSIP அமைந்துள்ளது. அடுத்த நான்கு ஆண்டில், இலங்கையின் 4.7 மில்லியன் மக்களை உள்வாங்குவதற்கு இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் 'அனைவருக்கும் நீர்' எனும் திட்டத்துக்கு, இந்த மேலதிக நிதி உதவியாக அமைந்திருக்கும்.

இந்தத் திட்டத்தினூடாக நீர் விநியோக கட்டமைப்பு, ஏற்கெனவே காணப்படும் நீர் விநியோக கட்டமைப்புகளை மறுசீரமைப்பு செய்தல், வீடுகள், பாடசாலைகளுக்கு கழிவறை வசதிகள், கழிவுநீர் வடிகட்டல் பகுதிகள் போன்றவற்றுக்கு நிதியளிப்பு வழங்கப்படும்.

நிலைபேறாண்மையை உறுதி செய்வதற்கு, கட்டமைப்புகளை இயக்குவதற்கு உள்ளூர் சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. செயற்பாடுகள், பராமரிப்பு, மீளமைப்பு செலவுகளை ஈடு செய்வதற்காக ஒவ்வொரு குடியிருப்பாளரும் கட்டணத்தை செலுத்துவதற்கு உடன்பட்டுள்ளனர்.

40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் உதவியாக வழங்கப்பட்டுள்ளதுடன், 18 வருடங்களில் முதிர்ச்சியடையும்; இதில் ஐந்தாண்டுகள் காலக்கெடுவும் அடங்கியுள்ளது.

முல்லேரியா ஆதார வைத்தியசாலைக்கு தீவிர சிகிச்சைப் பிரிவு

# அன்பளிப்பு செய்தது செலான் வங்கி

முல்லேரியாவில் அமைந்துள்ள கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலைக்கு சகல வசதிகளையும் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவை செலான் வங்கி அன்பளிப்பு செய்துள்ளது. கொவிட்-19 தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்கான போராட்டத்தில் பங்களிப்பு வழங்கும் வகையில் அண்மையில் இந்த சிகிச்சைப் பிரிவை வங்கி கையளித்தது. இந்த சிகிச்சைப் பிரிவு, விசேடமாக அமைந்த தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டு தொழில்நுட்ப கட்டமைப்பைக் கொண்டுள்ளதுடன், கொவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களாக இனங்காணப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு பயன்படுத்தப்படும்.

இந்த கையளிப்பு நிகழ்வில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, கொவிட்-19 தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு நிலையத்தின் தலைமை அதிகாரி இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா, செலான் வங்கியின் தலைமை செயல்பாட்டு அதிகாரி ரமேஷ் ஜயசேகர, கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் அதிகாரிகள் மற்றும் செலான் வங்கியின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர். சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களை பின்பற்றி இந்த நிகழ்வு இடம்பெற்றது.

2020 மார்ச் மாதத்தில் இலங்கையில் கொவிட்-19 தொற்றுப் பரவலின் முதல் அலை இனங்காணப்பட்ட போது, அரசாங்கத்தின் வழிகாட்டலின் கீழ், கொவிட்-19 தொற்றால்



பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான பிரத்தியேக வைத்தியசாலையாக கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை மாற்றப்பட்டது. சகல வசதிகளையும் படைத்த, முழுமையாக செயலாற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு ஒன்றை கொண்டிருக்க வேண்டிய தேவையை கவனத்தில் கொண்டு, நவீன வசதிகள் படைத்த தீவிர சிகிச்சைப் பிரிவை நிறுவுவதற்கு செலான் வங்கி முன்வந்திருந்தது. இந்த சிகிச்சைப் பிரிவுக்கான அடிக்கல் நாட்டல் நிகழ்வு கடந்த ஆண்டு இடம்பெற்றது. இந்நிலையில், இந்த முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தில் கொவிட்-19 தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் தேசிய முயற்சிகளுக்கு பங்களிப்பு வழங்கும் வகையில் கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலைக்கு சகல வசதிகளையும் படைத்த தீவிர சிகிச்சைப் பிரிவை செலான் வங்கி அன்பளிப்பு செய்துள்ளது.

செலான் வங்கியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரத்ன கருத்துத் தெரிவிக்கையில், "கொவிட் தொற்றுப் பரவல் என்பது இலங்கையர்களை பாதிக்கும் பிரச்சினையாக மட்டுமின்றி உலகளாவிய ரீதியில் பொது மக்களின் முதல் தர எதிரியாக உள்ளது. இத்தொற்றின் முதல் கட்டத்திலேயே தேசிய சுகாதார சேவைகளுக்கு உதவும் வகையில் விசேட தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டு தொழில்நுட்பத்துடன் கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவை நிறுவுவது தொடர்பான எமது தீர்மானம், செலான் வங்கியின் சமூகப் பொறுப்புணர்வு நடவடிக்கைகளின் ஒரு அங்கமாக அமைந்துள்ளது. இந்த தீவிர சிகிச்சைப் பிரிவை நிர்மாணிப்பதற்கு செலான் வங்கியின் சகல ஊழியர்களும் ஆற்றியிருந்த பங்களிப்பு தொடர்பில் நான் பெருமை கொள்வதுடன், தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மத்தியிலும், இந்தத் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு அவசியமான ஊழியர்களையும் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கியிருந்தமைக்காக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன்." என்றார்.

நவீன வசதிகளைக் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு, 5 படுக்கைகளைக் கொண்டுள்ளதுடன், நோய் எதிர்ப்புத்திறன் குறைந்தவர்களுக்காக விசேட தனிமைப்படுத்தல் பகுதியையும் கொண்டுள்ளது. மருத்துவ வாயு மற்றும் ஒட்சிசன் விநியோகத்தை இந்த அலகு கொண்டுள்ளதுடன், மாற்றுத்திறன் படைத்தவர்களுக்கு இலகுவாக பிரவேசிக்கக்கூடிய வசதிகளையும் கொண்டுள்ளது. கொவிட்-19 நோயாளர்களை பராமரிப்பதற்கு போதியளவு இடைவெளியை கொண்டதாகவும், அநாவசியமான வெளிப்படுத்தல்களை தவிர்த்துக் கொள்ளக்கூடியதாகவும் இந்த தீவிர சிகிச்சைப் பிரிவு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

SLT–MOBITEL இன்

# 'Entrepreneurship Studio' திட்டம் அறிமுகம்

தொழில்நுட்ப ஆரம்பநிலை நிறுவனங்கள் மத்தியில் புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சியாண்மையை ஊக்குவிக்கும் வகையில், SLT-MOBITEL, புத்தாக்கமான 'தொழில்முனைவோர் அரங்கம்' ('Entrepreneurship Studio') திட்டத்தை அண்மையில் அறிமுகம் செய்திருந்தது.

ஆரம்பநிலையிலுள்ள தொழில்நுட்பசார் தொழில் முயற்சியாளர்களுக்கு நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வது, ஆலோசனை வழிகாட்டல்களைப் பெறுவது, தொழில்நுட்ப கட்டமைப்பினூடாக தொடர்புகளை கட்டியெழுப்புவது போன்றவற்றுக்கு கவர்ச்சிகரமான வாய்ப்பை வழங்குவதாக அமைந்திருக்கும். இந்தத் திட்டத்துக்கான விண்ணப்பதாரிகள் இனங்காணப்பட்டு 12-16 வார காலத்துக்கான வழிகாட்டல் ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். இதன் போது அவர்களுக்கு பயிற்சிகள், வழிகாட்டல்கள், பயிற்சிப்பட்டறைகள் மற்றும் ஆரம்பிப்பு முகாம்கள் போன்றன வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தினூடாக, பங்குபற்றுநர்களுக்கு அறிவு மற்றும் திறன் போன்றவற்றை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதுடன், இணை விருத்தி, முதலீட்டு கையகப்படுத்தல் மற்றும் தொழில்நுட்ப தீர்வுகளை வணிகமயப்படுத்திக் கொள்வதற்கான உதவிகள் வழங்கப்படுவது மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவிக் கொள்வதற்கான உதவிகளை வழங்குவது போன்றன மேற்கொள்ளப்படும்.

தொழில் முயற்சியாளர்கள் தமது தொழில்நுட்பத்தை அண்மித்து வியாபார மாதிரிகளை கட்டியெழுப்பிக் கொள்வது என்பது தொடர்பில் கண்காணிக்கப்படுவதுடன், முதலீட்டாளர்கள் வலையமைப்பை சந்திப்பது மற்றும் அணுகுவது, தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களுடன் வணிக நடவடிக்கைகள் ஆரம்பிப்பது மற்றும் அறிவுசார் சொத்து உரிமைகள் (IP rights) போன்ற ஒழுங்குபடுத்தல் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுதல் போன்றன வழங்கப்படும். மேலும், தெரிவு செய்யப்பட்ட பத்து ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கு ஒரு மில்லியன் ரூபாய் வரை நிதி உதவி வழங்கப்படும். இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்ப நாள் நிகழ்வை கொண்டிருக்கும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட சகல ஆரம்ப நிலை நிறுவனங்களும் தமது வியாபாரங்களை, தொழில்நுட்ப துறைசார் முன்னோடிகள், எதிர்கால முதலீட்டாளர்கள் மற்றும் கையகப்படுத்தக்கூடியோருக்கு விளக்கமளிப்பார்கள்.

விண்ணப்பங்களுக்கான கோரிக்கை தற்போது திறந்துள்ளதுடன், ஜூன் 14 வரை ஆர்வமுள்ள ஆரம்பநிலை நிறுவனங்கள் தமது விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.

ஜோலார்பேட்டை

பேரறிவாளன்

# 'இனி சிறைக்கு செல்லக்கூடாது'

## டுவிட்டரில் தாய் வேண்டுகோள்

பேரறிவாளன் இனி சிறைக்கு செல்லாமல் இருக்க தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அற்புதம்மாள் டுவிட்டரில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், கடந்த 28ஆம் திகதி ஒரு மாதம் பரோலில் நான்காவது முறையாக தனது வீட்டுக்கு வந்துள்ளார்.

இந்நிலையில், பேரறிவாளனுக்கு தொடர் சிகிச்சை அளிக்க வேண்டும். அதனால் இனிமேல் சிறைக்கு அவர் செல்லக்கூடாது. அதற்கு, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பேரறிவாளன் தாயார் அற்புதம்மாள் டுவிட்டர் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது, "கடந்த 30 ஆண்டு சிறை வாழ்க்கை அனுபவிக்கும் பேரறிவாளன் பலவிதமான நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளார். பேரறிவாளனுக்கு சிறு, சிறு மருத்துவம் கிடைத்தாலும், தொடர் மருத்துவம் கிடைப்பது இல்லை. இதனால் அவரது உடல்நிலை மேலும் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது, கொரோனா தொற்று



கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக சிறையிலுள்ள கைதிகளின் எண்ணிக்கை குறைக்க அவர்களுக்கு பரோல் வழங்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. எனவே, நீண்ட சிறைத் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன் இனி சிறைக்கு செல்லக்கூடாது. அதற்கான நடவடிக்கையை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எடுக்க வேண்டும்" என கோரிக்கை விடுத்துள்ளார்.

புதுடெல்லி

'நியூயோர்க் டைம்ஸ்' க்கு

## இந்திய அரசாங்கம் கண்டனம்




'இந்தியாவில் கொரோனாவுக்கு, 42 இலட்சம் பேர் பலியாகிவிட்டனர்' என, செய்தி வெளியிட்ட, அமெரிக்க நாளிதழுக்கு மத்திய அரசாங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க நாளிதழான 'நியூயோர்க் டைம்ஸ்' இல், இந்தியாவில் கொரோனாவுக்கு மூன்று இலட்சம் பேர் பலியாகியுள்ளதாக, அந்நாட்டு அரசாங்கம் தெரிவிக்கிறது. உண்மையில், 42 இலட்சம் பேர் வரை பலியாகியுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. பலி எண்ணிக்கையை, இந்தியா மூடி மறைக்கிறது என, செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இந்தச் செய்திக்கு மறுப்பு தெரிவித்து, 'நியூயோர்க் டைம்ஸ்' க்கு கண்டனம் தெரிவித்தும், மத்திய சுகாதார துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், 'எந்த ஆதாரமும் இன்றி, கற்பனையின் அடிப்படையில் 'நியூயோர்க் டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

டேராடூன்

பத்ரிநாத் கோவில் முன்

## பூசாரிகள் போராட்டம்

உத்தரகாண்ட் மாநிலத்தில் அமைந்துள்ள பத்ரிநாத் கோவில், கேதார்நாத் கோவில், கங்கோத்திரி கோவில், யமுனோத்திரி கோவில் ஆகிய நான்கு கோவில்கள் இந்துக்களின் புனித தலங்கள் ஆகும்.

ஆண்டுதோறும் கோடைக் காலத்தில், இந்துக்கள், இந்த நான்கு தலங்களுக்கும், யாத்திரை சென்று வழிபாடுகள் செய்வர். இந்த யாத்திரைக்கான ஏற்பாடுகளை உத்தரகாண்ட் சார்தாம் தேவஸ்தான மேலாண்மை சபை ஒருங்கிணைந்து மேற்கொள்வது வழமை.

இந்நிலையில், உத்தரகாண்ட் சார் தாம் தேவஸ்தான மேலாண்மை சபையைக் கலைக்க வேண்டும் என்று பூசாரிகள் கூறி வருகின்றனர். இந்த கோரிக்கையை வலியுறுத்தி, கேதார்நாத் கோவில் முன்பு அமைதியான முறையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சமூக இடைவெளியை பின்பற்றி, கோவில் முன்பு அமர்ந்துள்ளனர். மூன்றாவது நாளாக நேற்று (13) போராட்டம் நீடிக்கிறது.

திருவள்ளூர்

மதுக்கடைகளை

## 'மூடுவோம் என்றவர்கள் திறக்கின்றனர்'



தி.மு.க ஆட்சிக்கு வந்தால் மதுக்கடைகள், சாராய ஆலைகள் மூடப்படும் எனக் கூறியவர்கள் மதுக்கடைகளைத் திறந்து வைத்துள்ளனர் என பா.ஜ.கட்சியின் மாநிலத் தலைவர் எல். முருகன் தெரிவித்தார்.

பெரியபாளையம் பகுதியில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் கொரோனா நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதில், பா.ஜ.கட்சியின் மாநிலத் தலைவர் எல். முருகன் பங்கேற்றார்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், கொரோனா முதல் அலையின்போது, எதிர்க்கட்சி தலைவராக இருந்த ஸ்டாலின், மதுக்கடைகளை மூட வேண்டும் எனக்கூறி போராட்டம் நடத்தினார். அத்துடன், தி.மு.க ஆட்சிக்கு வந்தால் மதுக்கடைகள், சாராய ஆலைகள் மூடப்படும் எனவும் கூறினார்.

தற்போது ஆட்சிக்கு வந்தவுடன் அதை மறந்துவிட்டு, மதுக்கடைகளைத் திறப்பது தமிழக மக்களை ஏமாற்றும் வேலை. மத்திய அரசாங்கம் ஒன்றிய அரசாங்கம் அல்ல; அது பேரரசு. சட்டப் புத்தகத்தில் ஒன்றிய அரசு என இல்லை.

தி.மு.க ஆட்சிக்கு வந்தால், பெண்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என தி.மு.க தேர்தல் வாக்குறுதி அளித்தபடி செய்யவில்லை. அதேபோல், தி.மு.க ஆட்சிக்கு வந்தால் பெற்றோல் விலை லீற்றருக்கு ரூ.4 குறைக்கப்படும் என அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதியும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்று முருகன் தெரிவித்தார்.

இந்தியா

உலகில் உருவாகும்

## 'தொற்று நோய்களை தடுக்க அறைகூவல்'



'ஒரே பூமி, ஒரே சுகாதாரம்' என்ற மந்திரத்தை முன்வைத்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி, வருங்காலத்தில் இது போன்ற பெருந்தொற்றுகள் ஏற்படுவதைத் தடுக்க உலக ஒற்றுமை, தலைமைத்துவத்துக்கு அழைப்பு விடுத்தார்.

இவ்வாறு,பிரிட்டனில் நடைபெறும் ஜி7 மாநாட்டில் காணொளி வாயிலாக கலந்து கொண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்.

'மீண்டும் வலுவாகக் கட்டியமைப்போம் - சுகாதாரம்' என்ற தலைப்பில் கீழ் பேசிய பிரதமர் மோடி, உலகை கொரோனா தொற்றில் இருந்து மீட்டெடுப்பது, எதிர்கால பெருந்தொற்றுகளுக்கு எதிரான திறனை வலுப்படுத்துவது ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டுமெனவும் கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய பிரதமர் மோடி, இந்தியாவில் கொரோனா இரண்டாம் அலையில் உதவி செய்த ஜி7 நாடுகளுக்கும், விருந்தினர் நாடுகளுக்கும் தனது பாராட்டைத் தெரிவித்தார்.

இந்தியா 'ஒன்றுபட்ட சமூகமாக' எப்படி கொரோனாவை எதிர்கொண்டது. தொழிற்சாலைகள், பொதுமக்கள் அனைவரும் ஒன்றுபட்டு எடுத்த முயற்சிகள் போன்றவற்றைக் குறித்தும் பிரதமர் மோடி உரையாற்றினார்.

தடுப்பூசி மேலாண்மை குறித்து விவரித்த பிரதமர் மோடி, வளரும் நாடுகளுக்கு தங்கள் அனுபவம், நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்ள இந்தியா தயாராகத் இருப்பதாக தெரிவித்தார்.

புதுடெல்லி

அரசாங்கத்தின் மீது

## காங்கிரஸ் குற்றச்சாட்டு



'கொரோனா தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த போர்கால அடிப்படையில் பொது சுகாதார திட்டத்தை அறிவித்து, இருக்க வேண்டிய அரசாங்கம், பிரதமரின் மாய புகழ் பிம்பத்தை காப்பதிலேயே கவனமாக இருந்தது. இந்த அரசாங்கத்தின் திறமையின்மையால் நம் சகோதரர்களை இழந்துள்ளோம்' என காங்கிரஸ் கட்சி 'டுவிட்டர்' பக்கத்தில் பதிவு வெளியிட்டுள்ளது.

இதையடுத்து 'யார் பொறுப்பு?' என்ற 'ஹேஷ்டேக்' உடன் பல்வேறு காங்கிரஸ் தலைவர்களும் சமூகவலைதளங்கள் வாயிலாக பாரதிய ஜனதா கட்சி மீது குற்றம் சுமத்தி உள்ளனர்.

பெங்களூர்

ரூ.2 கோடி இலஞ்சம் கைமாறியது

## சிறை அதிகாரி மீது வழக்கு



சசிகலா சிறைவாசம் அனுபவித்த போது, அவருக்கு சிறையில் சொகுசு வசதிகள் செய்து கொடுக்க சிறைத்துறை டி.ஜி.பியாக இருந்தவருக்கு, ரூ.2 கோடி இலஞ்சம் கொடுக்கப்பட்டதாக புகார் எழுந்தது. இந்த விவகாரம் குறித்த வழக்கு பதிவாகி 4 ஆண்டுகள் ஆகியும், இதுவரை நீதிமன்ற அறிக்கை தாக்கல் செய்யப்படாமல் கிடப்பில் போடப்பட்டு இருந்தது. இந்தநிலையில், சென்னை ஆழ்வார்பேட்டையை சேர்ந்த சமூக ஆர்வலர் கர்நாடக உயர்நீதிமன்றில், சசிகலாவுக்கு சிறையில் சிறப்பு வசதிகள் செய்து கொடுக்க ரூ.2 கோடி இலஞ்சம் கைமாறியது தொடர்பாக ஒரு பொதுநல மனு தாக்கல் செய்திருந்தார். இது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.



நைஜீரியா

# ‘ஆயுததாரிகளால் 53 பேர் படுகொலை’

நைஜீரியாவின் வடமேற்கு ஸம்ஃபாரா மாநிலத்தில், ஆயுதந்தரித்த தாக்குதலாளிகளால் 53 பேர் கொல்லப்பட்டதாக பொலிஸாரும், உள்ளூர்வாசிகளும் தெரிவித்துள்ளனர்.

கடவா, கவாட்டா, மடுபா, கன்டா சமு, சலவா, அஸ்கவா ஆகிய கிராமங்கள் உள்ள ஸுர்மி மாவட்டத்தையே மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரிகள் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ளவர்களை தாக்குதலாளிகள் சுட்டதுடன், விவசாயிகளைத் தாக்கியும் உள்ளனர்.

வேட்டைக்காரர்களாலேயே பெரும்பாலும் இத்தாக்குதல்கள் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




## ஜி 7 மாநாட்டுக்காக...

பிரித்தானியாவின் கொர்ன்வோலில் ஜி 7 மாநாட்டுக்காக, ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரித்தானியாவின் பிரதமர் பொரிஸ் ஜோன்சன், பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன், ஜேர்மனி சான்செலர் ஏங்கெலா மேர்கல், கனடாப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஜப்பானியப் பிரதமர் யொஷிஹிடே சுகா, இத்தாலியப் பிரதமர் மரியோ ட்ராஹி ஆகியோர், பிரித்தானிய மகாராணி எலிஸபெத், ஐரோப்பிய சபையின் தலைவர் சார்ள்ஸ் மிக்கெல, ஐரோப்பிய ஆணைக்குழுத் தலைவர் உர்சுலா வொன் டெ லெயென் ஆகியோருடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட சிறப்புமிக்க படம் இது.



தென்னாபிரிக்கா

மதுபானப் பிரச்சினை:

## மலாவி இராஜதந்திரிகள் வெளியேற்றம்

தென்னாபிரிக்காவில் இருந்து தமது சில இராஜதந்திரிகள் வெளியேற்றப்பட்டுள்ளதாக மலாவி தெரிவித்துள்ளது.

தீர்வையற்ற அல்கஹோலைக் விற்றதாக கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இராஜதந்திரிகள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

நாட்டை விட்டு வெளியேற இராஜதந்திரிகளுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் 72 மணித்தியாலங்களை தென்னாபிரிக்கா அளித்துள்ளதாக மலாவியின் வெளிநாட்டமைச்சு தெரிவித்துள்ளது.

இராஜதந்திர சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி இராஜதந்திரிகள் தீர்வையற்ற அல்ஹககோலை விற்றதைக் கண்டுபிடித்ததாக தென்னாபிரிக்காவின் சர்வதேச விவகார அமைச்சு கூறியுள்ளது.

சீனா

## ‘வாயுக் குழாய் வெடிப்பில் 11 பேர் பலி’

மத்திய சீன நகரம் ஒன்றில், வசிப்பிட சமூகம் ஒன்றில் வாயுக் குழாய் வெடிப்பு ஒன்றில் 11 பேர் கொல்லப்பட்டதுடன், 37 பேர் மோசமாகக் காயமடைந்ததாக அரச ஊடகமான சி.சி.டி.வி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

ஹுபெய் மாகாணத்திலுள்ள ஷியான் நகரத்தில் ஏற்பட்ட மோசமாக விபத்தையடுத்து மொத்தமாக 144 பேர் வெளியேற்றப்பட்டதாக சி.சி.டி.வி மேலும் கூறியுள்ளது.



ஐ. அமெரிக்கா

பெஸோஸுடன்

## விண்வெளி செல்ல $28 மில்லியன்

அமெஸொன் நிறுவுநர் ஜெஃப் பெஸோஸுடன், அவரின் புளூ ஒரிஜின் நிறுவனத்துடன் விண்வெளிக்கு பயணம் செய்ய ஏலம் எடுத்தவர் ஒருவர் 28 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை செலுத்தியுள்ளார்.

நேற்று முன்தின ஏலத்திலேயே குறித்த ஏலத் தொகை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில், எதிர்வரும் வாரங்களில் குறித்த ஏலமெடுத்த நபர் வெளிப்படுத்தப்படுவார் என புளூ ஒரிஜின் டுவீட் செய்துள்ளது.

குறித்த ஏலத்தில் 140க்கும் மேலான நாடுகளில் இருந்து ஆர்வம் வெளிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




இங்கிலாந்துக்கு எதிரான

# தொடரைக் கைப்பற்றிய நியூசிலாந்து




இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை நியூசிலாந்து கைப்பற்றியுள்ளது.

பேர்மிங்ஹாமில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த இரண்டாவது டெஸ்டை நேற்று வென்றமையைத் தொடர்ந்தே, 0-1 என தொடரை நியூசிலாந்து கைப்பற்றியுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, டான் லோரன்ஸ் ஆட்டமிழக்காமல் 81, றோறி பேர்ண்ஸ் 81, மார்க் வூட் 41, ஒலி ஸ்டோனின் 20 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 303 ஓட்டங்களை தமது முதலாவது இனிங்ஸில் பெற்றது. பந்துவீச்சில், ட்ரெண்ட் போல்ட் 4, மற் ஹென்றி 3, அஜாஸ் பட்டேல் 2, நீல் வக்னர் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, வில் யங் 82, டெவோன் கொன்வே 80, றொஸ் டெய்லரின் 80 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 388 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஸ்டுவர்ட் ப்ரோட் 4, மார்க் வூட் 2, ஒலி ஸ்டோன் 2, ஜேம்ஸ் அன்டர்சன் 1, டான் லோரன்ஸ் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, மற் ஹென்றி 3, நீல் வக்னர் 3, ட்ரெண்ட் போல்ட் 2, அஜாஸ் பட்டேல் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய நிலையில், சகல விக்கெட்டுகளையும் இழந்து 122 ஓட்டங்களையே பெற்றது. பதிலுக்கு, 38 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, ஒரு விக்கெட்டை மாத்திரமே இழந்து வெற்றியிலைக்கையடைந்தது.

## அதிர்ச்சிக்குள்ளான டு பிளெஸிஸ்




பாகிஸ்தான் பிறீமியர் லீக்கில் (பி.எஸ்.எல்), பெஷாவர் ஸல்மிக்கு எதிரான போட்டி ஒன்றிலிருந்து அதிர்ச்சி காரணமாக தென்னாபிரிக்காவின் முன்னாள் அணித்தலைவர் பப் டு பிளெஸிஸ் விலகியிருந்தார்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகர் அபு தாபியில் நேற்று முன்தினம் நடைபெற்ற குறித்த போட்டியில் தலையில் தாக்கப்பட்டதையடுத்தே டு பிளெஸிஸ் அதிர்ச்சிக்குள்ளாகி போட்டியிலிருந்து விலகியிருந்தார்.

சக அணி வீரர் மொஹமட் ஹஸ்னைனுடன் மோதும்போதே இவ்வாறு டு பிளெஸி அதிச்சிகுள்ளாகியிருந்தார்.

சில நிமிடங்கள் மைதானத்திலிருந்த டு பிளெஸிஸ், பின்னர் நடந்து வெளியே சென்று, அதன் பின்னர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார்.

## ஷகிப்புக்கு மூன்று போட்டித் தடை



பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஷகிப் அல் ஹஸனை மூன்று போட்டிகள் இடைநிறுத்திய அந்நாட்டு கிரிக்கெட் சபை, 500,000 தகாவை தண்டமாக அறவிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற டாக்கா பிறீமியர் லீக் தொடரில் தவறான நடத்தைக்காகவே குறித்த தண்டனையை ஷகிப் எதிர்நோக்கியுள்ளார்.

விக்கெட்டுகளை ஷகிப் உதைத்திருந்ததுடன், பின்னர் மூன்று விக்கெட்டுகளையும் புடுங்கி எறிந்திருந்தார்.

பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடர்:

## சம்பியனான கிரஞ்சிகோவா

பிரெஞ்சுத் தலைநகர் பரிஸில் நடைபெற்று வந்த பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடரில், செக் குடியரசின் பார்பொரா கிரஜ்ஜிகோவா சம்பியனாகியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தனது இறுதிப் போட்டியில், ரஷ்யாவின் அனஸ்டாசியா பவ்லுசென்கோவாவை எதிர்கொண்ட கிரஜ்ஜிகோவா, 6-1, 2-6, 6-4 என்ற செட் கணக்கில் வென்று சம்பியனானார்.





முதலாவது டெஸ்டில்

## மேற்கிந்திய தீவுகளை வீழ்த்திய தென்னாபிரிக்கா

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் தென்னாபிரிக்கா வென்றுள்ளது. இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், சென். லூசியாவில் வியாழக்கிழமை (10) ஆரம்பித்த டெஸ்ட், நேற்று முன்தினம் (12) இரவு முடிவுக்கு வந்திருந்தது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், தமது முதலாவது இனிங்ஸில் 97 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, சகல விக்கெட்டுகளையும் இழந்து 322 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் சகல விக்கெட்டுகளையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்று இனிங்ஸ் மற்றும் 63 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இலங்கைக்கு எதிரான தொடருக்கான

## இங்கிலாந்துக் குழாமில் மீண்டும் வோக்ஸ்



இலங்கையை எதிர்கொள்வதற்கான தமது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிக் குழாமில், கிறிஸ் வோக்ஸ், டேவிட் வில்லி, லியாம் டோஸனை இங்கிலாந்து மீள அழைத்துள்ளது.

காயம் காரணமாக பென் ஸ்டோக்ஸ், ஜொஃப்ரா ஆர்ச்சர், றீஸ் டொப்லி ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: ஒய்ன் மோர்கன் (அணித்தலைவர்), மொயின் அலி, ஜொனதன் பெயார்ஸ்டோ, சாம் பில்லிங்ஸ், ஜொஸ் பட்லர், சாம் கர்ரன், டொம் கர்ரன், லியாம் டோஸன், கிறிஸ் ஜோர்டான், லியாம் லிவிங்ஸ்டோன், டேவிட் மலன், அடில் ரஷீட், ஜேஸன் றோய், டேவிட் வில்லி, கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட்.

## யூரோ போட்டியில் நிலைகுலைந்து வீழ்ந்த எரிக்ஸன்



யூரோ கிண்ணத் தொடரில், நேற்று முன்தினம் நடைபெற்ற பின்லாந்துடனான போட்டியில் டென்மார்க்கின் மத்தியகள வீரரான கிறிஸ்டியன் எரிக்ஸன் நிலைகுலைந்து வீழ்ந்திருந்தார்.

டென்மார்க்கில் நடைபெற்ற குறித்த போட்டியின்போது களத்தில் வைத்தே எரிக்ஸனுக்கு செயற்கைச் சுவாசமளிக்கப்பட்டிருந்ததுடன், வைத்தியசாலைக்கு பின்னர் கொண்டு செல்லப்பட்டிருந்தார்.

இந்நிலையில், எரிக்ஸன் நிலையாக இருப்பதாகவும், நினைவுக்கு வந்து எழும்பியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த போட்டியானது இச்சம்பவத்துடன் இடைநிறுத்தப்பட்டு பின்னர் ஆரம்பித்த நிலையில், ஜோயல் பொஹ்ஜன்பாலோ பெற்ற கோலுடன் 1-0 என்ற கோல் கணக்கில் பின்லாந்து வென்றிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 14 ஜூன் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.